# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௩, கார்த்திகை<br>டிசம்பர் 1972 | பரல் ௪ |
|---|---|---|

## திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனார் தமிழ்ப் பெருந் தொண்டர் திருவரங்கனார் கொழும்பில் ஒரு பெரிய வணிக நிறுவனத்தில் பணியாற்றி வந்தனர். யான் பாளையங் கோட்டை தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தேன். அவர் எனக்கு அறிவுரை கூறி உடன் பிறப்பன்பு காட்டிக் கடிதங்கள் எழுதுவார். அவற்றில் திருக்குறள் அறவுரைகளும் நாலடியார் நன்னெறிகளும் செறிந்து கிடக்கும். அதனால் எனக்கு இளமையிலேயே திருக்குறளையும் நாலடியாரையும் கற்க வேண்டுமென்ற அவா ஏற்பட்டது. என் தமையனார் எங்கள் வீட்டிலே தொகுத்து வைத்துள்ள நூல்களுள் திருக்குறள் மூலமாகவும், உரையோடு கூடியதாகவுமுள்ள சில பதிப்புக்கள் உண்டு.

சொல்லின் செல்வர் திரு. சேதுப்பிள்ளை பாளையங்கோட்டையில் என் வீட்டுக்கு அண்மையிலே குடியிருந்து கொண்டு தூய சேவியர் பள்ளியிலே பயின்று வந்தார். எனக்கு அடுத்தடுத்த மேல் வகுப்பில் அவர் பயின்றார்.

விளையாட்டு நேரங்களில் யான் என் நண்பர்களோடு கிளித்தட்டு, சடுகுடு, கால்பந்து முதலியவை விளையாடுவேன். திரு. சேதுப்பிள்ளையும் எங்களுடன் கலந்து மகிழ்ந்து விளையாடுவார். அதனால் இளமையிலேயே அவருடைய நட்பு எனக்குக் கிடைத்தது.

நான்காம் படிவ (இப்போது ஒன்பதாவது வகுப்பு) த்தில் பயிலும்போது அவருக்கு முதற் பரிசாகத் திருக்குறள் உரை நூல் கிடைத்தது. கோடை விடுமுறையில் பரிசு நூலை எடுத்துக் கொண்டு பொருநை யாற்றங்கரையிலுள்ள தமது பிறந்தவூர் இராசவல்லிபுரத்துக்குப் போயிருந்தார். அங்கே தமிழிலும் சைவத்திலும் பெரும்புலமை நிறைந்த தவத்திரு செப்பறை அடிகளார் திரு சேதுப்பிள்ளைக்குத் திருக்குறள் பரிசாகக் கிடைத்ததைப் பெரிதும் பாராட்டினர். அடிகளாரிடம் திரு. பிள்ளை திருக்குறளை முறையாகப் பாடங்கேட்டுத் திருந்திய புலமை பெற்றார். அதுமுதல் அவருடைய பேச்சில் குறளடிகள் பொலிவுற்று விளங்குவதைக் கண்டும் கேட்டும் மகிழும் பேறு பெற்றவன் யான். அவர் இயல்பாகவே செஞ்சொல் நாவினர். அவர் பேச்சில் தமிழின்பம் பொங்கித் ததும்புவதைக் கண்டு மகிழ்வேன்.

திரு. சேதுப்பிள்ளை சேவியர் பள்ளியில் பயின்று இறுதித் தேர்வில் வெற்றி பெற்றபின் இந்துக் கல்லூரியிற் சேர்ந்து இடைக்கலைக் (இன்றர்மீடியட்) கல்வி பயின்று முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். பின்னர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை (பி. ஏ.) வகுப்பிற் சேர்ந்து பயிலும்போது தமிழ் கட்டாய பாடமாகவோ தேர்வுப் பாடமாகவோ அமையவில்லை. ஆனால், திரு. சேதுப்பிள்ளையோ தமிழைத் தாமே முறையாகக் கற்றுச் சிறந்த பேச்சாளராகவும் கட்டுரையாளராகவும் விளங்கினார். கல்லூரி முதல்வர், தமிழ்ப் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியார் (எம். ஏ.) ஆகியவர்களின் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். அக்கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்ற திரு. சேதுப்பிள்ளை ஒரே காலத்தில் சட்டக் கல்லூரியில் மாணவராகவும், பச்சையப்பன் கல்லூரியில் தனிப் பயிற்சி ஆசிரிய (Tutor) ராகவும் இருக்கலானார்.

1920 ஆம் ஆண்டில் திரு. சேதுப்பிள்ளை கோடை விடுமுறையில் நெல்லைக்கு வந்திருந்தனர். அவர்தம் நெருங்கிய உறவினரும் பெருஞ் செல்வருமான திரு. கூத்தநயினார் பிள்ளை வீட்டு மாடியில் நெல்லை மாணவர் மன்றச்சார்பில் 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். அதனைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய திருக்குறள் திறனாய்வுப் பேச்சு செவிக்கின்பமும் சிந்தைக்கு விருந்துமாக இருந்தது. வந்திருந்தோர் அனைவரும் விழித்த கண் விழித்தபடியே அமைந்திருந்து கேட்டுப் பெரு மகிழ்வுற்றனர். பேச்சு முடிந்தவுடன் திரு. பிள்ளையை அணுகி "ஐயா, உங்களுடைய அருமையான பேச்சு நூல் வடிவில் வர

வேண்டுமென்பது எனது அவா. எனவே, அதனை விரைந்து எழுதுங்கள்'' என்று வேண்டினேன். அவரும் அவ்வாறு எழுதுவதாக மனமுவந்து கூறினர். அவ்வாறே அவர் எழுதிய ''திருவள்ளுவர் நூல்நயம்'' என்ற நூல் முதற்பதிப்பாக 1923ஆம் ஆண்டில் சென்னை ஒற்றுமைப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது.

**திருவள்ளுவர் நூல்நயம்:**

முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்தபின் என் தமையனார் அதன் முழு உரிமையினையும் திரு. சேதுப்பிள்ளையவர்களிடம் விலை கொடுத்துக் கழகத்துக்குப் பெற்று 1926இல் இரண்டாம் பதிப் பாக வெளியிட்டனர். அதற்குப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை (எம்.ஏ., எம்.எல்.) சிறந்த முன்னுரை வழங்கியுள்ளனர். இது திருக்குறட் சார்பாகக் கழகம் அதுவரை வெளியிட்ட நூல் களில் (76ஆவது வெளியீட்டு எண் பெற்று) மூன்றாவது நூலாக உள்ளதென்பதும் இன்றுவரை அது பல பதிப்புக்களைப் பெற் றுள்ள தென்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் எழுதிய 'சிலப் பதிகார நூல்நயம்' என்ற நூலின் உரிமையினை ஒற்றுமைப் பதிப்பகத்தார் பெற்று அதனை அச்சிட்டு விற்று வருகின்றனர். 'நூல்நயம்' என்ற தலைப்பினைத் தம் இருபெருந் தமிழ் நூல்கட் குச் சூட்டிய பெருமை அவருக்கே உரியது.

இங்கே கழகத்துக்கும் அவர்க்குமுள்ள பிற்காலத் தொடர்பினைக் குறிப்பிடுவது முதன்மையாகும். ''திரு. சேதுப் பிள்ளையோடு இளமைக் காலமுதல் தொடர்பு கொண்ட நீங்கள் முதன்முதல் 'திருவள்ளுவர் நூல்நயத்'தை வெளியிட்டீர்கள். அதன் பின் அவர் எழுதிய பிற நூல்களை ஏன் வெளியிடவில்லை'' என்று நண்பர் சிலர் என்னிடம் கேட்பதுண்டு. அவரும் தம் நூல்களையெல்லாம் கழக வழியே வெளியிடுதல் வேண்டுமென்று விரும்பினர். ஆனால், மிகவுங் கூடுதலான விற்பனை ஊதியம் (ராயல்டி) வேண்டுமென்று கேட்டனர். புலவர் சிலர் நூல்களைக் கழகம் முன்னமே ராயல்டி முறையில் வெளியிட்டுள்ளமையால் திரு. பிள்ளை கேட்டபடி கூடுதல் ஊதியம் கொடுப்பதற்கில்லை என்று கூறவேண்டியதாயிற்று. தனியார் பதிப்பகமாக இருப்பின் விருப்பம்போல் கூடுதல் ஊதியம் கொடுத்து அவரால் பிறவழிகளில் பேரூதியம் பெறலாம். ஆனால், கழகம் கூட்டுப் பங்கு நிறுவனம் (Limited Company) ஆதலால் அவருக்கு மட்டும் கேட்டபடி மிகவும் கூடுதல் ஊதியம் கொடுப்பதா யிருப்பின் கழகத்துக்குத் தொடர்ந்து பல தொல்லைகள் ஏற்படும் என்று கருதியே இசையக்கூடவில்லை. எனவே, அவர் வேறு

நனியார் பதிப்பகத்தை நாடவேண்டியவராயினர். அதனால் பல்கலைக் கழகப் பாடநூல்கள் அமைக்கும் வகையில் அவர்வழிப் பெறவேண்டிய பேருதியத்தைக் கழகம் இழந்ததென்பது உண்மை. யான் அதற்காக வருந்தவில்லை. அவர்கள் மறை வுற்ற நாள்வரை அவரோடு அன்பாகவே பழகி வந்தேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியார் திருஉருவச்சிலையைப் பல்கலைக் கழகத்திலே அமைப்பதற்கு ரூபா இருநூறும் அவர் பேரால் 'கலைக்கட்டளை' நிறுவுவதற்கு ரூபா முந்நூறும் திரு. சேதுப் பிள்ளை 24-2-1948இல் எழுதிய கடிதத்தின்படி நன்கொடை வழங்கி அவர் மனங்குளிரச் செய்தேன்.

1944 பிப்பிரவரித் திங்களில் இரண்டு நாள்கள் சென்னைப் புரசைப்பாக்கம் முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் கழகத்தின் புறநானூறு மாநாட்டுக்குத் தலைமை தாங்கி அதனை மிகவும் சிறப்புற நடத்தியதை மறப்பதற்கில்லை.

அவர் சிற்சில காலங்களில் தமது ஆராய்ச்சிக்குக் கழக நூல்நிலையத்திலுள்ள சில நூல்களைக் கேட்டனுப்புவர். அவற்றை உடனே அனுப்பி வைப்பதுண்டு. 9-10-1944 இல் அவர் எழுதிய கடிதம் வருமாறு :

> "தங்கள் நூல்நிலையத்தி"லுள்ள நூல் (History of the S. P. C. K. &·S. P. G. Mission of Tirunelveli by Rev. R. Caldwell) ஓர் ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் தேவைப்படுகிறது. உடன் அனுப்பினால் நலம்"

1951 ஏப்பிரல் இறுதியில் தமிழ்நாடு அரசு கல்வி யமைச்சரான திரு தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியார் விருப்பப்படி யாழ்ப்பாணத்தில் "நான்காவது தமிழ் விழா" நடைபெற்றது. அவ்விழாவுக்கு என்னை வருமாறும் அடுத்த தமிழ் விழாவை நெல்லையில் நடத்துவது பற்றி விழாவிலே அறிவிக்குமாறும் திரு.சேதுப்பிள்ளை யும் திரு. செட்டியாரும் கூறினார்கள். அவர்கள் அழைப்பின்படி யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். சென்று சேர்ந்த மறுநாள் அஃதாவது விழாவின் முதல்நாள் அம்மை நோய் கண்டு அங்குள்ள தொற்றுநோய் மருத்துவமனையிற் சேர்க்கப் பெற்றேன். உச்சிமுதல் உள்ளங்கால் வரை கொப்புளம். வாழைக் குருத்திலையில் படுக்க வைக்கப்

பெற்றிருந்தேன். மூன்று நாள்கள் உணர்விழந்த நிலையிலுமிருந்தேன். நோய் கடுமையாக இருந்தமையால் நலம்பெற்று வெளியேவர 40 நாள்களாயின. கண்ணுக்கு ஊனம் ஏற்படாமல் இறைவன் அருள் புரிந்தான். திருஞானசம்பந்தர் விழாவுக்கு அங்கே வந்திருந்த கோவை சிவக்கவிமணியவர்களும் புலவர் முத்து சு. மாணிக்கவாசகம் அவர்களும் மருத்துவ மனையில் யான் தங்கியிருப்பது தெரிந்து காண வந்தனர். எனக்கேற்பட்டுள்ள நோயின் கடுமையைக் கண்டு மனம் வருந்திச் சிறிது நேரம் பேச நாவெழாமல் நின்று பின் ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டு ஆறுதல் கூறினர். "ஒரு நிமிடங் கூட நீர் சும்மாயிருக்க மாட்டீர். உமக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கும் பொருட்டே இந்நோயைத் தந்திருக்கிறான் இறைவன். நோய் நீங்கி நீடு வாழ்வீர். நுந் தொண்டு மேலும் சிறக்கும்" என்று வாழ்த்தினர். அவர்கள் இருவரும் திருநீற்றுப் பொலிவினராய்க் காட்சியளித்தது எனக்குப் பெரியதோர் ஆறுதலைத் தந்தது.

என்னை யாழ்ப்பாணத்துக்கு அழைத்த திரு. சேதுப்பிள்ளையும் திரு.அவிநாசிலிங்கஞ் செட்டியாரும் என்னைக் காண வரவுமில்லை; என் நலமுசாவிக் கடிதம் எழுதவுமில்லை. யான் சூன் திங்கள் 11 ஆம் நாள் திருநெல்வேலிக்குப் புறப்பட்டு வந்து அங்கிருந்து திருக்குற்றாலம் சென்று தங்கி ஓய்வு பெற்றேன்.

27-9-1951இல் திரு.சேதுப்பிள்ளை நலம் உசாவி ஆறுதல் கூறி எனக்கு எழுதிய கடிதம் வருமாறு:

"இரண்டு வாரங்களுக்கு முன்பு தங்கள் உடல் நலம் அறிய விரும்பித் திருக்குற்றாலத்துக்குக் கடிதம் எழுதியிருந்தேன். மறுமொழி கிடைக்கவில்லை. ஆதலால், நெல்லையில் இருப்பீர்கள் என்று எழுதுகிறேன். தங்களைக் கண்டு வந்த அன்பர்கள் வாயிலாக அவ்வப்போது தங்கள் உடல் நலமுறுதலை அறிந்து கொண்டேன். முற்றும் நலனடையும் வரை உழைப்பைக் குறைத்து உடலைப் பேணுதல் வேண்டும். திண்மையுடன் வாழ்ந்து எண்ணியவெல்லாம் எய்துமாறு இறைவன் அருள்புரிக".

யான் அதற்கு 1-10-1951 இல் எழுதிய மறு மொழி வருமாறு :

"தங்கள் அன்பார்ந்த 27-9-51 கடிதம் வரப் பெற்றேன். அதற்காக மிக்க நன்றி. தாங்கள் திருக்குற்றாலத்திற்கு எழுதியதாகக் குறித்த கடிதம் எனக்கு வரவில்லை. அதன் காரணம் தெரிவதற் கில்லை. தாங்கள் என்பால் மிக்க அன்புடையவர்கள் என்பதும் என் நலத்தினை உசாவியறிந்து மகிழும் பண்பினர் என்பதும் யான் அறிவேன். தங்கள் கருத்தின்படியே யான் உடல்நலம் பெறும்வரை உழைப்பினைக் குறைக்கும் பொருட்டே திருக்குற்றாலத் தில் தங்கியிருக்கிறேன்.

தங்கள் செம்மை நலத்தையும் நீடுவாழ்வையுங் கோரித் திருவருளை வழுத்துகிறேன்".

அடுத்த தமிழ் விழாவைக் கொண்டாடுவது பற்றித் தமிழ் வளர்ச்சிக் கழகக் காரியதரிசிகள் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி யவர்களும், திரு. ம. ப. பெரியசாமித் தூரனவர்களும் 24-10-51 இல் எழுதிய கடிதம் முன் யாழ்ப்பாணத் தமிழ் விழாவை யொட்டியதாதலால் அதனைக் கீழே குறிப்பது பொருத்தமாகும். அது வருமாறு :

"நாளைக்கு 25-10-51ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குச் சர்வகலாசாலைக் கட்டிடத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று நடைபெறும். அதிலே அடுத்த தமிழ் விழாவை எங்குக் கொண்டாடுவது என்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அக்கூட்டத் திற்குத் தாங்களும் வந்திருந்து உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். தாங்கள் அவசியம் வருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்".

விசேஷ அழைப்பு :

1. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை,
சர்வகலாசாலைக் கட்டிடம், சென்னை.

2. திரு. சுப்பையா பிள்ளை அவர்கள்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பவளக்காரத் தெரு, சென்னை-1.

(1. தேதி. 2. சர்வகலாசாலை. 3. நிர்வாக சபை. 4. ஆலோசித்து. 5. அவசியம். 6. விசேஷ. 7. காரிய தரிசிகள். இவை வடசொற்கள்)

தமிழ்த் தாய்க்குத் தன்னேரில்லாத் தொண்டாற்றிய பேராசிரியர் டாக்டர் சேதுப்பிள்ளை 25-4-1961 இல் இறையடி சேர்ந்தமை கேட்டதும் பிரிவுச் செய்தியினை அச்சிட்டுச் சென்னையில் எனக்குத் தெரிந்த புலவர்கட்கும் அன்பர்கட்கும் அனுப்பி வைத்தேன். அன்று அவர்கள் பொன்னுடலை எரியூட்டும் நிகழ்ச்சிக்கும் சென்று வந்தேன். **செந்தமிழ்ச் செல்வி மேத் திங்கள் இதழ்** திரு. பிள்ளையின் **நினைவுமலராக** வெளியிடப் பெற்றது. பிறகு நெல்லையில் அவரோடு நெருங்கிப் பழகிய புலவர் திரு. அ. க. நவநீதகிருட்டிண பிள்ளையைக் கொண்டு "சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை" என்ற பள்ளித் துணைப்பாட நூலையும், நூல்நிலையப் பதிப்பாக 'டாக்டர் சேதுப்பிள்ளை' என்ற நூலையும் செந்தமிழ் நடையில் எழுதச் செய்து கழகவழி அச்சிட்டு வெளியிடலாயிற்று. 'சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை' என்ற நூலை வெளியிடு முகத்தான் நெல்லையில் அவரது நினைவு விழாவும் மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

அவரில்லத்திலிருந்த உருவப் படம் செம்மையாக இல்லாமையால் 1960 ஆம் ஆண்டில் அவரைச் சென்னை மலைச்சாலையிலுள்ள சி. கே. வேல் படப்பிடிப்பகத்துக்கு அழைத்துச் சென்று கவர்ச்சியானதொரு படம் எடுக்கப் பெற்றது. அது பெரிதாக்கப் பெற்றுப் பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தில் புலவர் படத்தொகுப்பரங்கில் காட்சியாக வைக்கப் பெற்றுள்ளது.

செந்தமிழ் வளர்த்த நம் பிள்ளை தாம் ஈட்டிய பொருளையும் தம் துணைவியார்வழிச் செல்வத்தையும் அறத்துக்கே எழுதி வைத்துள்ளனர். தாம் முதன்முதல் தமிழ்ப் பணியாற்றிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ரூபா 25,000 வழங்கி ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளனர். பின்னர் 25 ஆண்டுகள் தமிழ்ப் பணியாற்றி வெள்ளிவிழாக் கண்டு சிறப்புப் பெற்றதற்கறிகுறியாகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 25 000 வழங்கி மற்றோர் அறக்கட்டளையும் நிறுவியுள்ளனர். எஞ்சிய பொருளையும் தமக்குப் பின் தம்முடைய நூல்களின் பேரால் வரப்பெறும் ஊதியத்தையும் தாம் உறுப்பினராகவும் துணைத் தலைவராகவுமிருந்த நெல்லை நகராட்சிக்குத் தமது பெயரால் மகப்பேற்றுமனை (Maternity Home) நடத்தும்பொருட்டு விருப்ப ஆவணம் எழுதி வைத்துள்ளனர்.

தொல் பழஞ்செந்தமிழைத் தம் அன்னையாகக் கொண்டு நம்முள்ளங் கவர்ந்த சேதுப்பிள்ளை தம்மைச் சீராட்டி வளர்த்த அவ்வன்னைத் தமிழையே தாம் பெற்றெடுத்த குழந்தையாகக் கருதித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்துத் தம் செல்வமனைத்தையும் அத் தீந்தமிழ்க் குழந்தை வளர்ச்சிக்கே விட்டுச் சென்ற பெருந்தகைமையை வாயார வாழ்த்தி வணங்குவோம்; புகழ்பாடுவோம். இதுகாறும் கழகம் வெளியிட்ட "திருவள்ளுவர் நூல்நயம்" என்னும் நூல்பற்றிய செய்தியினைக் கண்டோம். இனி அடுத்துக் கழகம் வெளியிட்ட திருக்குறள் பதிப்புக்களைப் பற்றிய இனிய செய்திகளைக் காண்போம்.

என் தமையனார் கொழும்பில் இருந்தபோது மறைத்திரு மறைமலையடிகளாரை அவண் வரவழைத்துச் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்து பெரும் பொருள் தொகுத்து வழங்கினர். மேலும் பல்லாவரத்தில் அடிகளார் மாளிகை கட்டுவதற்கும் திருமுருகன் அச்சுக்கூடம் அமைப்பதற்கும் வணிகப் பெருமக்களிடம் நன்கொடை பெற்று அனுப்பிவைத்தனர். அடிகளார் நூல்களையும் மிகுதியாகத் தருவித்து விற்றுக் கொடுத்தனர்.

**சோமேசர் முதுமொழி வெண்பா**

1918இல் அவர் கொழும்பிலிருந்து சென்னைக்குப் போந்து 'திருசங்கர் கம்பெனி' என்ற பெயரில் பதிப்பகத்தைத் தொடங்கி நடத்துவாராயினர். மறைமலையடிகள் திருவாசகம் நான்கு அகவல்கட்கு எழுதிய விரிவுரையினைச் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் பெயரில் திங்கள் இதழ்போல் 24 பக்கங்களைக் கொண்ட பகுதி பகுதியாக அச்சிட்டு வெளியிட்டு வந்தனர். முன்னமே குறித்தபடி என் தமையனார்க்குத் திருவள்ளுவர் திருக்குறளில் பேரீடுபாடு இருந்தமையால் முதன்முதல் அவர் அச்சிட விரும்பிய நூல் சிவஞான முனிவர் இயற்றியருளிய 'சோமேசர் முதுமொழி வெண்பா" எனனுங் குறள் வெண்பாவாகும். கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் திரு. வா. மகாதேவ முதலியாரைக் கொண்டு உரை எழுதச் செய்துள்ளனர். பரிமேலழகர் சிற்சில குறள் பாக்கட்கு எழுதிய உரை தமிழ் மரபுக்கும் சைவசித்தாந்த மரபுக்கும் மாறுபட்டிருத்தலாலும் நடை சிறிது கடினமாக இருத்தலாலும், மறைத்திரு மறைமலையடிகளாரின் மதிநலம் நிறைந்த மாணவர் நாகை திரு. சொ. தண்டபாணி பிள்ளையே திருக்குறளுக்குத் திருந்திய நல்லுரை எழுதக்கூடிய திறமையாளர் எனக் கண்டு அவரிடம் அதனை எழுதும்படி ஒப்புவித்தனர். நூல் முழுமைக்கும் இத்தனைத் திங்களில் உரையினை எழுதி முடித்தல் வேண்டு

மென்றும், அதற்கு முழு ஊதியம் இவ்வளவு தொகை கொடுப்பதென்றும், அதுகாறும் திங்கடோறும் அவர்க்கு ரூபா முப்பத்தைந்து விழுக்காடு கொடுத்து வருதல் வேண்டும் என்றும் உடன்படிக்கை செய்துகொண்டனர். நாகை சொ. தண்டபாணி பிள்ளையைப் போல் அவர்தம் தமையனார் நாகை சொ. கோபாலகிருட்டிண பிள்ளையும் மறைமலையடிகளார் மதிப்பிற்குரிய மாணவராக இருந்து வந்தனர்.

இவ்வாறு இரு நூல்கட்கும் உரை எழுத ஏற்பாடு செய்ததும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னும் கூட்டுப் பங்கு நிறுவனத்தை அமைக்கும் பொருட்டுத் திருவரங்கனார் திருநெல்வேலிக்குப் போக வேண்டியவராயினர். எனவே, சென்னையிலே திருசங்கர் கம்பெனியை நடத்த வேண்டிய பொறுப்பினை என்னிடம் ஒப்புவித்தனர். யான் **1920 திசம்பர்த் திங்களில்** அப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன். **1920 செப்டம்பர்த் திங்களில்** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னுங் கூட்டுப் பங்கு நிறுவனம் திருநெல்வேலியில் பதிவு செய்யப் பெற்றது. அதன் கிளை சென்னையில் 1921 பிப்ரவரியில் அமைக்கப் பெற்றது. எனவே, திருசங்கர் கம்பெனி நடத்தி வந்த வணிகத்தை நிறுத்தி, அதன் உடைமைகளைக் கழகத்திடம் ஒப்புவித்து அதற்கு முகவர் என்ற பொறுப்பினை ஏற்றுப் பணிசெய்யலானேன்.

பண்டிதர் திரு. வா. மகாதேவ முதலியார் எழுதிய **சோமேசர் முதுமொழி வெண்பா** உரை கழகத்தின் 3ஆவது வெளியீடாக அவ்வாண்டிலேயே அச்சிடப்பெற்று வெளிவந்தது.

திருக்குறளில் ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒவ்வொரு குறட்பாவை எடுத்து அதனை விளக்குமுகத்தான் அதற்குப் பொருந்தியதொரு கதையை மேலிரண்டு அடிகளில் அமைத்துத் தனிச்சொல்லும் அமைத்துப் பின்னிரண்டு அடியிற் குறளை அமைத்து வெண்பாவாக்கி முடிப்பதே 'குறள் வெண்பா' நூலாகும். இரண்டு அடிகளிற் கதையைச் சுருக்கிக் காட்டுவதும் எதுகை மோனை தனிச்சொல் அதற்கேற்ப அமைப்பதும் மிகவும் அருமையான செயலாகும்.

**முருகேசர் முதுநெறி வெண்பா, இரங்கேச வெண்பா**

முதன்முதல் இயற்றப்பெற்ற குறள் வெண்பா நூலே 'சோமேசர் முதுமொழி வெண்பா'வாகும். அதனை அடுத்து இயற்றப் பெற்றவை சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் இயற்றியருளிய **'முருகேசர் முதுநெறி வெண்பா'**வும்

பிறைசை சாந்தக் கவிராயர் இயற்றிய **'இரங்கேச வெண்பா'** என்னும் **'நீதி சூடாமணி'**யுமாகும்.

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் எழுதிய உரையுடன் முன்னது 1965இல் 1246ஆவது வெளியீடாகவும், பின்னது 1966இல் 1252ஆவது வெளியீடாகவும் கழகவழி வெளியிடப் பெற்றுள்ளன.

### சிவசிவ வெண்பா, திருத்தொண்டர் வெண்பா முதலியன

1967இல் 1298ஆவது வெளியீடாகக் 'குறள் வெண்பா நூற்கோவை' என்னுந் தலைப்பில் சிவ சிவ வெண்பா, திருத்தொண்டர் வெண்பா, வள்ளுவர் நேரிசை, வடமலை வெண்பா, தினகர வெண்பா ஆகிய ஐந்தையும் இணைத்து ஒரு தொகுப்பாக்கி விளக்கக் குறிப்புரைகளுடன் முதற்பகுதியாக வெளியிட்டுள்ளோம்.

### முதுமொழி மேல்வைப்பு, திருமலைக் கொழுந்து வெண்பா முதலியன

அதே ஆண்டில் 1304ஆவது வெளியீடாகக் 'குறள் வெண்பா நூற்கோவை இரண்டாம் பகுதி' விளக்கக் குறிப்புரையுடன் வெளியிடப் பெற்றது. அதன்கண் **முதுமொழி மேல்வைப்பு, திருமலைக் கொழுந்து வெண்பா, திருமலை வெண்பா, திருப்புல்லாணி மாலை** ஆகிய நான்கு நூல்களும் அடங்கியன. இந்நான்கில் திருப்புல்லாணி மாலை மட்டும் வெண்பா யாப்பிலமையாது கலிப்பா யாப்பிலே அமைந்துள்ளது. எனவே, குறள் வெண்பா நூல்களனைத்தும் கழகவழி வெளிவரும் வாய்ப்பினை இறைவன் அருளினன்.

இந்நூல்களின் வாயிலாகப் பெரியபுராணம் உட்படப் பல புராண நூற் கதைகளை யறிவதோடு குறட்பாக்கள் பலவற்றிற்குப் புதிய விளக்கங்களும் கிடைக்கப் பெறுகின்றோம்.

மதுரை பெரும்புலவர் **திரு. செகவீர பாண்டிய கவிராயர்** 1330 குறட் பாக்களுக்குமே வெண்பா இயற்றித் **'திருக்குறள் குமரேச வெண்பா'** என்னும் நூலைத் தமது அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட்டுப் பெரும் புகழடைந்தனர். அவற்றிற்கு விரிவுரையும் எழுதியுள்ளார். ஆசிரியரின் தமிழ்ப் பெரும் புலமைத் திறத்தை அந்நூல் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அதன்வழித் தமிழ் நூற்பரப்பையெல்லாம் அறிதற்குரிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

**திருக்குறள் அறம் தண்டபாணி விருத்தியுரை**

திரு. தண்டபாணி பிள்ளையவர்கள் திருக்குறளில் முதல் 30 அதிகாரங்கட்கு உரை எழுதியதுமே இருமல் நோய் கண்டு இராயப்பேட்டை மருத்துவமனையிற் சேர்க்கப் பெற்றனர். அவர்க்கு வழக்கம்போல் திங்கடோறும் ரூபா முப்பத்தைந்து முறையாகக் கொடுத்து வந்ததோடு மருந்து முதலியனவும் வாங்கிக் கொடுத்து வந்தேன். ஓரளவு நலம் பெற்று வீட்டுக்குப் போய்த் திருக்குறள் உரையினைத் தொடர்ந்து எழுதினர். அறத்துப்பால் முடிய எழுதிய உரையின் கையெழுத்துப்படியை என்னிடம் ஒப்புவித்தனர். மேலும் நான்கு அதிகாரங்கட்கு உரை எழுதியதும் நோய் மிகுதிப்பட்டு 1922இல் இறையடி சேர்ந்தனர். அவர் வாயிலாகத் திருக்குறள் முழுமைக்கும் விரிவுரை எழுதி வெளியிட வேண்டுமென்ற எண்ணம் நிறைவேருமற் போயிற்று. அது தமிழ் நாட்டுக்குப் பேரிழப்பேயாகும்.

சுடுகாட்டில் அவர் பருவுடலை எரியூட்டு நிகழ்ச்சிக்கு மறைமலையடிகள் வந்திருந்தனர். அடிகளார் மிகவும் வருந்தி நாத்தழுதழுத்து ஆற்றிய இரங்கலுரையினைக் கேட்ட அனைவரும் கதறிவிட்டனர். அடிகளார் அதே போல் 23-5-1931இல் தம் மதிப்புக்குரிய மாணவர் செந்தமிழ்ப் புலவர் மணி திருநாவுக்கரசு முதலியார் இம்மண்ணுலக வாழ்வு நீத்தபின் தொண்டை மண்டலந் துளுவ வேளாளர் பள்ளிக் கட்டடத்தில் நிகழ்ந்த இரங்கற்கூட்டத்தில் பேசியபோதும் பெரிதும் உளம் வருந்திக் கண் கலங்கலாயினர்.

உடன்படிக்கையின்படி அவர் எழுதிய பகுதிக்குரிய ஊதியம் இரு மடங்கிற்கு மேலாகிவிட்டது. அத்தொகை முழுவதும் திருசங்கர் கம்பெனிக் கணக்கிலேயே கொடுக்கப் பெற்றது. அத்தொகையினைக் கழகத்தார் என் தமையனார்க்குக் கொடுப்பதற்கு முதற்கண் மறுப்பினும் பின்னர் ஏற்றுக் கொண்டனர். எனவே, 1933இல் ‘திருக்குறள் அறம் தண்டபாணி விருத்தியுரை’ என்ற தலைப்பில் 153ஆம் எண் வெளியீடாக வெளியிடப் பெற்றது. அதனைத் தொடர்ந்து சில அதிகாரங்கட்குக் கழகப் புலவராயிருந்த செல்லூர்க்கிழார் இராமசாமிப் பிள்ளை விரிவுரை எழுதினர். அவரும் திடுமெனப் பக்கவாதத்தினல் இறையடி சேர்ந்துவிட்டனர். அடுத்துப் பெருமழைப் புலவரவர்களைக் கொண்டு எஞ்சிய பகுதிக்கு விரிவுரை எழுதச் செய்து வெளியிடக் கருதினேன். அவரும் இறையடி சேர்ந்தனர். திருக்குறள் அறம் தண்டபாணி விருத்தியுரையினைக்

கற்றறிந்தார் அனைவரும் பாராட்டி இதுபோல்வதோருரை திருக்குறள் முழுமைக்கும் வாராமற் போயிற்றே என்று வருந்துகின்றனர். இறைவன் எங்ஙனமும் அதனை முற்றுவித்தருள்வான் என்ற நம்பிக்கையுடையேன்.

**திருக்குறள் மூலம் (முதற் பதிப்பு-1924)**

1923ஆம் ஆண்டில் கழகக் கிளைநிலையம் சென்னை, இலிங்கிச் செட்டித் தெரு, 306 ஆம் எண் கட்டட மாடியிலும், சிவகாமி விலாச அச்சுக்கூடம் அதன்கீழ்ப் பகுதியிலும் அமைந்திருந்தன. அச்சுக்கூடத்தின் உரிமையாளர் திரு. சி. மு. கோவிந்தராச முதலியார் புத்தகம் அச்சிடுவதில் மிகவுந் திறமையுடையவர். கழக நூல்களை அவரே தமது அச்சுக்கூடத்தில் அழகாக அச்சிட்டுத் தந்தனர். திருக்குறள் மூலத்தைக் கையடக்கமான அளவில் பரிசுப் பதிப்பாகக் கொண்டுவர வேண்டுமெனக் கருதி அவரிடங் கூறினேன். அவர் என்னோடு மிகவும் அன்பாகப் பழகி வந்தார். எனது கருத்தை அவர் ஏற்றுத் திருக்குறள் மூலம் $13\frac{1}{2} \times 19\frac{1}{4}$ செ.மீ. அளவில் ஒவ்வொரு பக்கத்தில் ஒவ்வோர் அதிகாரம் அமையுமாறு அச்சிட்டுத் தந்தனர். புதிய எழுத்துக்களில் உயர்ந்த மையில் நூல் அச்சிடப் பெற்றமையால் கண்ணுக்கு அழகாகவும் கற்பதற்கு எளிதாகவும் இருந்தது. அதனை மூன்று வகைகளிற் கட்டடஞ் செய்து குறைந்த விலை வைத்து விளம்பரப்படுத்தினேன். தாளுறைக் கட்டடப் பதிப்புக்கு விலை அணு 4. துணிக்கட்டுப் பதிப்புக்கு விலை அணு 8. இருபக்கமும் பஞ்சு வைத்து ரெக்சைன் துணியினுல் கட்டப்பெற்ற பரிசுப் பதிப்புக்கு விலை ரூ. 1-8. இதுகாறும் திருக்குறள் பரிசுப் பதிப்புப் பெருதிருந்த குறை கழகத்தின் இப்பதிப்பினுல் நீங்கிற்று.

ரெக்சைன் கட்டுப் பதிப்பு முகப்பில் உலகப்படமும் அதன் நடுவில் 'திருக்குறள்' என்ற பெயரும் பொன் துகள் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறே முதுகில் நூற் பெயரும் பொன் எழுத்தால் பொறிக்கப் பெற்றுள்ளது. அது விவிலிய நூல்போல் தகதகவெனக் காட்சியளித்துக் காண்போர் உள்ளத்தைக் கவர்ந்தது.

இப்பதிப்பினைப் பெற்ற தவத்திரு **எச். ஏ. பாப்ளிதுரை** மட்டற்ற மகிழ்ச்சியுற்றுத் தாமே 3-10-1924இல் கார்டியன், யங்மென் ஆப் இந்தியா, கிறிஸ்டியன் பேட்டிரியட் எரால்டு ஆகிய நான்கு கிறித்தவ சமய இதழ்கட்கும் ஆங்கிலத்தில் தமது பாராட்டினை எழுதியுள்ளார். எனக்கும் அன்றே பாராட்டுக் கடிதம் எழுதி இதழ்கட்கு அனுப்பப்பெற்ற பாராட்

டுரையோடு அனுப்பி வைத்தனர். அவ்விரண்டு பாராட்டுரைகளும் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 2 பரல் 9 இல் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப் பெற்றிருக்கின்றன. அவற்றின் தமிழாக்கம் வருமாறு :

"திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் அண்மையில் வெளியிடப்பெற்ற திருக்குறளின் புதிய பதிப்பினைப் பற்றித் தங்களுடைய பத்திரிகையைப் படிக்கும் தமிழ்மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தமிழ் நூல்கள் பதிக்கப் பெறத் தொடங்கிய நாள்தொட்டு அழியாப் பெரும் புகழ் படைத்த அரிய நூலாகிய திருக்குறள் அதன் சிறப்பிற்கேற்ற அழகிய பதிப்பினை முதன் முறையாகப் பெறுவது இதுவே யாகும்.

திருத்தமான அச்சும், கண்கவர் வனப்பும் பொருந்தக் கையடக்கமான அளவில் இப்பதிப்பினைக் கொண்டு வந்ததால் இச் சைவசித்தாந்தக் கழகம் உலகிற்கு உகந்ததொரு பெரிய நன்மையை விளைத்ததென்பது நன்கு போதரும். இஃது அழகியதாகவும், திருத்தமாகவும், தூய்மையான அச்செழுத்துக்களில் பதிக்கப் பெற்றுள்ளது. யாம் படித்த அளவில் அச்சுப் பிழைகள் ஒன்றுங் காணப்பெறவில்லை."

**கழக மூகவர் திரு. வ. சுப்பையாவுக்கு எழுதியது :**

"திருக்குறளைப் போன்றுள்ள மற்ற அரிய நூல்களெல்லாம் விலையுயர்ந்த பதிப்புக்களில் வந்திருக்கின்றன. ஆனால், திருக்குறள் மட்டும் அவற்றிற்கொப்பான பதிப்புத் திறன் பெற்று வெளிவருவது இதுவே முதன்முறையாகும்.

தனது பெருமைக் கேற்ப இவ்வரும் பெருநூல் சிறந்த பதிப்பினை இதுவரை பெறுதிருந்ததைப் பற்றி நினைந்து யாம் அடிக்கடி வருந்தியதுண்டு. எனவே, இக்குறையினை நீக்குவான் கருதித் தங்கள் கழகம் முன்வந்தது நமக்கு அளப்பிலா மகிழ்வை விளைவிக்கிறது. திருக்குறள் போன்றதொரு புத்தகம் அழகிய பதிப்பில் மக்களிடம் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். திருக்குறளை இவ்வழகிய பதிப்பிற் கிடைக்கப் பெற்றோமே ஈதல்லவோ

நாம் பெற்ற பாக்கியம், என்று கருதும்படி எம்மால் இயன்ற அளவு தெரிவிப்போம் என்று தாங்கள் உறுதியாக நம்பலாம்.''

*தவத்திரு எச். ஏ. பாப்ளி அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து* 'Sacred Kural Tamil Veda Thiruvalluvar' *என்ற தலைப்பில் கல்கத்தா அசோசியேசன் அச்சகத்திலே பதித்து வெளியிட்டுள்ளனர்.*

**திருக்குறள் பொழிப்புரை:**

கழகக் கிளை சென்னையில் திறக்கப் பெற்றபோது பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை சட்டக் கல்லூரியில் பேராசிரியராகவிருந்தார். அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எம். ஏ., பட்டமும் சட்டத்தில் எம். எல். பட்டமும் பெற்றவர். குற்றங்களின் நெறிமுறைகள் (Principles of Criminology) என்ற நூலெழுதி ரூ 10,000 பரிசுத்தொகையும், தாகூர் சட்ட விரிவுரையாளர் (Tagore Professor of Law) என்ற பட்டமும் பெற்ற பெரும் புகழாளர். அவர் நுண்மாண் நுழைபுலமிக்க பல்கலைப் புலவராவர். கழகப் பதிப்பு—தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரைக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளார். அவருடைய முயற்சியினாலேதான் 'சிவஞான பாடியம்' முழுமையும் முதன் முதல் அச்சிடப் பெற்று வெளிவந்தது. அதற்கும் அவர் ஆராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளனர்.

பண்டிதர் வா. மகாதேவ முதலியார் எழுதிய நளவெண்பா உரை நூலுக்கு ஆங்கிலத்திலே முன்னுரை எழுதித் தருமாறு பேராசிரியர் பிள்ளையை வேண்டினேன். கேட்டவுடனே எழுதிக் கொள்ளும் என்று சொல்லி முன்னுரையினை ஆங்கிலத்திலே மொழிந்தனர். இரண்டு பக்க அளவிலே நளவெண்பா நூல் நயத்தை அவர் விளக்கியது என் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தது. அவர் இயற்றிய நூல்களில் பெரும்பாலன அவர் கைப்பட எழுதப்பெறவில்லை. அவர் சொல்லி எழுதப் பெற்றவையே. நால்வர் வரலாறுகள், சேக்கிழார், பட்டினத்தார், தாயுமானவர், சிவஞான முனிவர் முதலானோர் வரலாறுகள் ஆகியவை சொல்லி எழுதப் பெற்றவையே.

யான் பகலில் கழகப் பணியை முடித்துவிட்டு இரவு 7 மணியளவில் பேராசிரியர் பிள்ளை இல்லத்துக்குப் போவேன். எனக்கு உறக்கம் வரும்வரை அவர் சொல்லுவதை எழுதுவேன். உறக்கத்தினின்று காலையில் முன்னதாக விழித்தெழுந்திருப்பின் அப்போதும் சிறிதுநேரம் அவர் சொல்லுவதை எழுதுவேன்.

அப்படி எழுதப் பெற்றதே 'திருக்குறள் பொழிப்புரை'. அது தமிழ் மரபையும் சைவசித்தாந்த மரபையும் தழுவி எழுதப் பெற்றதாகும். முன்னைய உரையாசிரியர்களில் எவரும் விளக்காது விட்ட 102, 103, 120 ஆம் குறட்பாக்களிலுள்ள உவமைகளை அவர் விளக்கியுள்ளமை கற்றறிவாளர் அனைவராலும் ஒருங்கே போற்றப் பெறுகின்றது. அவற்றை அடியிற்கண்டு மகிழ்க.

*102. "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

பொழிப்பு: நிலமானது காலத்திற் பயன் விளைப்பதியல்பு. அது காலத்திற் பயன் விளையாமையுமுண்டு. அக்காலத்திலும் நன்றி செய்வார் சிறந்தவர் என்றவாறு.

*103- "பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது"*

பொழிப்பு: கடல் தன்பால் மேகங்கொண்ட நீரை மீட்டுப் பெறுகின்றது. அங்ஙனம் பெறுதார் கடலினுஞ் சிறந்தவர் என்றவாறு.

*120. "நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது"*

பொழிப்பு: தானே உயர்வுடைய மலையினும் தனது ஆற்றலால் உயர்ச்சி பெற்றவன் பெரியவன் என்றவாறு.

இப் பொழிப்புரை நூலை 1928இல் கழக வழி அச்சிட்டு வெளியிடும் பெரும்பேறு கிடைத்தது. அதற்கு மிகவுங் குறைந்த விலை அணா 8 வைக்கப் பெற்றது.

முதன்முதல் கழகம் அச்சிட்ட திருக்குறள் மூலம் 4 அணாவுக்கும், திருக்குறள் பொழிப்புரை 8 அணாவுக்கும், திருக்குறள் பரிமேலழகருரை (உயர்ந்த கட்டடமுடையது) ரூ. 1-8க்கும் மிகவுங் குறைந்த விலை வைத்து விற்கப்பெற்றன என்பது அறிந்து மகிழ்தற்குரியது. 1937இல் முதன் முதல் வெளியிட்ட திருக்குறள் பரிமேலழகர் உரையினைப் பற்றிய குறிப்புக்கள் பின்னர் விளக்கப்பெறும்.

**திருக்குறள் மூலம்** (இரண்டாம் பதிப்பு-1929)

பெரும் புகழ் ஈட்டித் தந்த மேலே குறிப்பிடப்பெற்ற திருக்குறள் மூலப் பதிப்புக்குப் பின் நான்கு மூலப் பதிப்புக்கள்

வெவ்வேறு காலங்களில் வெளியிடப்பெற்றன. அவற்றில் முதல் மூன்று பதிப்புக்களும் வெவ்வேறு அளவுகள் உடையன. 1924இல் வெளியிடப்பெற்ற முதற்பதிப்பு வெளியீட்டெண் 42 தான் இவை மூன்றுக்கும் கொடுக்கப்பெற்றுள்ளது. நான் காவது பதிப்பு மட்டும் 1924இல் வெளியிட்ட முதற்பதிப்பின் அளவிலேயே அச்சிடப்பெற்றது.

தமிழ் மக்கட்கு அழியாப் புகழ் தேடித்தந்த உலகப் பொது மறையாந் திருக்குறளை எத்தனை எத்தனை வடிவங்களில் அச்சிட்டுக் கட்டடஞ் செய்து அணிபெறக் காணவேண்டுமோ அப்படியெல்லாம் காண வேண்டுமென்ற அவா அடிக்கடி எழுவதுண்டு. அதனால் முதற் பதிப்பு அளவினும் சிறிய அளவில் திருக்குறளை அச்சிட வேண்டுமென்று கருதினேன். எனவே, 1929இல் 9/6 செ. மீ. அளவில் இடப்பக்கம் 5 குறளும் வலப்பக்கம் 5 குறளுமாக மும்மூன்று வரிகளில் அமைத்து 1330 திருக்குறளும் செய்யுள் முதற் குறிப்பகரவரிசையோடு அச்சிடப் பெற்றன. இப் பதிப்பு நூலைத் திறந்து படிப்பவர்கட்கு ஒவ்வோர் அதிகாரமும் ஒரே பார்வையில் பார்க்கக் கூடியதாக அமைந்துள்ளது. சட்டைப் பையில் எடுத்துச் சென்று கற்பதற்கு ஏற்ற சிறிய அளவுடையது. இது பல பதிப்புக்க ளாகப் பல்லாயிரம் படிகள் அச்சிடப்பெற்றுப் பரவியுள்ளது. தமிழகத்தில் சிறிய அளவில் முதன்முதல் வெளிவந்த திருக் குறட் பதிப்பு இதுவேயாகும்.

பொது விற்பனைக்கு அது தாளுறை கட்டடமும் கலிக்காத் துணிக் கட்டடமும் பெற்றது. பரிசு வழங்குதற் பொருட்டு உயர்ந்த ரெக்சைன் கட்டடமும் வெள்ளிக் கட்டடமும் செய்யப் பெற்றுப் பெருமக்கள் பலர் பாராட்டுக்களைப் பெற்றது. கழக வழிதான் முதன்முதல் திருக்குறள் வெள்ளிக் கட்டடம் பெற்ற தென்பதும் அறிந்து மகிழ்தற்குரியது.

திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர் அருட்டிரு அருள் நந்தித் தம்பிரான் அடிகள் வெள்ளிக் கட்டடம் செய்யப் பெற்ற திருக்குறளில் இரண்டு படிகளைக் கழகத்திலிருந்து விலை கொடுத்துப் பெற்றனர். 1942 சனவரியில் மாட்சிமிகு இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தம் நண்பர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்களுடன் தமிழிசை மண்டபங் கட்டுவதற்கு நன்கொடை பெறும்பொருட்டுத் திருப்பனந்தாள் மடத்துக்குச் சென்றிருந்தனர். அடிகள் அவ்விருவரையும் அன்போடு வரவேற்றுத் தாம் வரவழைத்து வைத்திருந்த வெள்ளிக் கட்டடமுடைய திருக்குறளை அன்பளிப்பாக வழங்கி யுள்ளனர் என்பது தெரிந்து மகிழ்வுற்றேன். (தொடரும்)

# 9. உல் என்னும் வேர்ச்சொல்

[ஞா. தேவநேயன்]

**உல்²** (வளைதற் கருத்து வேர்)

உல்—உலம்=1. உருண்டு திரண்ட கல். "உலஞ் செய்த.... தோளான்" (சீவக. 2915). 2. திரட்சி. "உலங் கொள் சங்கத்தார்கலி" (தேவா. 112 : 8).

உலம்—உலவு. உலவுதல்=1. சுற்றுதல். 2. திரிதல். 3. உலாவுதல். "ஒருங்குதிரை யுலவுசடை" (திருவாச. 38 : 1).

உலவு—உரவு. உரவுதல்=உலாவுதல். "உரவுநீ ரழுவத் தோடு கலம்" (பெரும்பாண். 350).

உல்—உல—உலக்கை=1. உரலிற் கூலம் முதலியன குற்றும் உருண்டு நீண்ட கருவி. "மிளகெறி யுலக்கையின்" (பதிற்றுப். 41). 2. ஒரு படைக்கலம். "உலக்கை சூலம் வேல்" (கந்தபு. சதமுகன். 15). 3. உருண்ட வெருகன் கிழங்கு.

ம. உலக்க. க. ஒலக்கெ.

உலண்டு=உருண்டு நீண்ட கோற்புழு.

உல—உலவை=1. சுற்றி வீசும் காற்று. (திவா.) 2. ஊதை (வாத) நோய். "வழுத்துலவைக் குலமுழுதும்" (தைலவ. தைல. 88). உலவையான்=காற்றுத் தெய்வம். (கந்தபு. அரசு. 7).

உலவு—உலகு=1. உருண்ட ஞாலம். 2. உருண்ட அல்லது சுற்றிவரும் கோள். ம. உலகு.

உலகு—உலகம்=1. பெரிய உலகு. 2. ஞாலம். (பிங்). 3. உலகப் பொது. (திவ். திருவாய். 6 : 10 : 1). 4. நிலப் பகுதி. "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். அகத். 5). 5. மக்கட் டொகுதி. 6. நன்மக்கள். "உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்" (திருமுரு. 124). 7. உயிரினங்கள். "உலக முவப்ப வலனேர்பு திரிதரு" (திருமுரு. 1). 8. உயர் குணம் (பிங்.). 9. ஒழுக்கநடை. "ஒழுக்க நடையே யுலகம தாகும்". (மாறன, 320).

உலகம் — வ. லோக. இ. லோக்.

'லோக' என்னுஞ் சொற்கு வடவர் கூறும் பொருட் கரணியம் பார்க்கப்படுவது என்பது. இதன் பொருந்தாமையை அறிஞர் காண்க.

"காலம் உலகம் உயிரே உடம்பே" என்னும் தொல்காப்பிய நூற்பா (541) 'காலம்' என்னும் சொல்லைத் தென்சொல்லாகவே கொள்ளுதலையும் நோக்குக.

உலம் வருதல் = 1. சுழலுதல். 2. நெஞ்சு உழலுதல். "உயிர்க்கும் உசாஅம் உலம்வரும்" (கலித். 145 : 4).

உலம்வா—உலமா. உலமருதல் = 1. சுழலுதல். 2. உழலுதல். "புலம்பியா முலமர" (கலித். 83 : 2).

உலம்வரல்—உலமரல் = 1. உழலுதல். 2. துன்பம். (சூடா.).

உல்—உலா = 1. சுற்றி வரல். 2. அரசன் நகர்வலம் சுற்றிவரும் பவனி. "போந்தானுலா" (சங்கர. உலா.). 3. அரசனுலா பற்றிய பனுவல். "கலிவெண்பா வுலாவாம்". (வெண்பாப். செய். 27). உலாமடல் = ஒரு பனுவல். (இலக். வி. 857).

உலா—உலாம் = ஓர் உவமவுருபு. "வேயுலாந் தோளினார்" (சீவக. 1581).

உலா—உலாவு. உலாவுதல் = 1. சுற்றி வருதல். "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" (பெரியபு. பாயி. 1). 2. பவனி வருதல். 3. சூழ்தல். "தூசுலாய்க் கிடந்த" (சீவக. 550). 4. பரவுதல். "உயிரென ஒலாய தன்றே" (கம்பரா. ஆற்றுப். 20). 5. இயங்குதல். "வந்துலாய்த் துயர் செய்யும் வாடை" (பு. வெ. 8 : 16, கொளு).

ம. உலாவு.

உலா—உலாத்து. உலாத்துதல் = (செ. குன்றிய வி.) உலாவுதல். (செ. குன்றா. வி.). 1. உலாவச் செய்தல். 2. பரவச் செய்தல். ம. உலாத்து.

உலாத்துக் கட்டை = கதவு நின்றுடுஞ் சுழியாணி. உலாத்து—உலாத்தி. கொண்டை யுலாத்தி = ஒரு குருவி.

உலா — உலாஞ்சு. உலாஞ்சுதல் = 1. தலை சுற்றுதல். 2. அசைந்தாடுதல். கப்பல் உலாஞ்சுகிறது. (உ. வ.).

உல் — உலு — உலுக்கு. உலுக்குதல் = 1. அசைத்தல். 2. அசைத்து உதிர்த்தல். தெ., க. உலுக்கு.

அசைத்தல் என்பது, ஒன்றை வலமும் இடமும் அல்லது முன்னும் பின்னும் பன்முறை விரைந்து சாய்த்தல். சாய்தல் வளைதல் வகைகளுள் ஒன்று.

உலு — உலுத்து. உலுத்துதல் = அசைத் துதிர்த்தல்.

உலு — உலுப்பு. உலுப்புதல் = அசைத் துதிர்த்தல்.

உல் — உள் — உழல். உழலுதல் = 1. சுழலுதல். (பிங்.). 2. காற்றியங்குதல். "சிறுகாற் றுழலும்". (கல்லா. கண.). 3. அலைதல். "ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மை யால்" (நாலடி. 20). 4. நிலைகெடுதல். 5. துன்புறுதல்.

உழல் — உழலை = 1. சுழன்று வரும் செக்குலக்கை. 2. உருண்டு நீண்ட குறுக்குமரம். "உழலை மரத்தைப் போற் றொட்டன" (கலித். 106). 3. கணைய மரம். "வேழம்........ உழலையும் பாய்ந்திறுத்து" (பு. வெ. 12, வென்றிப். 8).

உழலைத்தடி (உழலைமரம்) = மாட்டின் கழுத்திற் கட்டும் கழுந்து.

உழல் — உழற்சி = 1. சுழற்சி. 2. அலைகை. 3. வருத்தம்.

உழல் — உழற்று. உழற்றுதல் = 1. சுழற்றுதல். 2. அலையச் செய்தல். "என்னை யவமே யுழற்றி" (திருக்கோ. 100, உரை).

உழல் — உழறு. உழறுதல் = அலைதல். "உழறலர் ஞானச் சுடர் விளக்காய்" (திவ். இயற். திருவிருத். 58). உழல் — உழன்றி = மாட்டின் கழுத்திற் கட்டும் கழுந்து.

உழிதல் = 1. அலைதல். "உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே" (தேவா. 553 : 10). 2. வளைதல்.

உழி — உழிஞை = பகையரண் முற்றும் (சூழும்) மறவர் சூடும் கொற்றான் மாலை. "உழிஞை முடிபுனைந்து" (பு. வெ. 6 : 1). 2. உழிஞைத்திணை. (தொல். பொ. 64.).

ம. உழிஞ்ஞு.

உழிதருதல்=1. திரிதல். உன்மத்தம் மேற்கொண் டுழிதருமே'' (திருவாச. 5 : 7). 2. இடமாறியலேதல். ''மண் மேல்........உழிதரக் கண்டோம்'' (திவ். திருவாய். 5 : 2 : 1).

உல்—உர்—உருள். உருளுதல்=1. புரளுதல். ''திண் வரை யுருள்கிலேன்'' (திருவாச. 5:39). 2. உருண்டு திரளுதல். 3. புரண்டழிதல். ''உலகெலா முருளு மின்றென்'' (சீவக. 2452). ம., க. உருள்., தெ. உரலு.

உருள்=1. தேர்ச்சக்கரம். ''உருள்பூந் தண்டார்'' (திருமுரு. 11). 2. வண்டி. (திவா.). 3. சகடமீன். (சூடா.). ம., க. உருள்.

உருள்—உருளி=1. வட்டம். ''உருளி மாமதி'' (சீவக. 532). 2. சக்கரம். ''வல்வா யுருளி கதுமென மண்ட'' (பதிற்றுப். 27:11). க. உருளி.

உருள்—உருளே=1. சக்கரம். ''சகடிரு சக்கர வுருளேக ளுய்க்கவே'' (பாரத. வேத்திர. 50). 2. உருண்ட கிழங்கு வகை. 3. கமலே யேற்றத்தில் வாற்கயிறு படும் உருளே.

ம. உருள.

உருளே—உருடை—ரோதை—L. rota, wheel.

ஒ. நோ. புருள்—புருளே—புருடை—பிருடை.

உருடை=வண்டி. ''உருடையூடு திரியும்'' (சேதுபு. முத்தீர். 42).

உருள்—உருண்டை=1. உருண்டையான பொருள். 2. கவளம். 3. திரட்சி.

உருண்டை—உண்டை. தெ. உண்ட. ''அண்டப்பகுதியி னுண்டைப் பிறக்கம்'' (திருவாச. திருவண்.).

உருள் — உருட்டு = 1. உருட்டுகை. 2. சக்கரம். ''உருட்டோட வோடிய தேர்'' (குலோத். கோ. 212). 3. திரட்சி. 4. வெருட்டு. 5. புரளும் குரலிசை. 6. மலேச் சரிவு. 7. ஏமாற்றுகை. உருட்டுப் புரட்டு. பொய்யும் புரட்டும் உருட்டும் திருட்டும்.

உலம்—அலம்=1. கவைக்கால் அல்லது கொடுக்குள்ள தேள். (திவா.). 2. நளியோரை (விருச்சிகராசி).

அலவன்=கவைக்கால் நண்டு. "ஆடு மலவனை யன்ன மருள்செய" (சீவக. 516).

அலம்[2]=சுழற்சி, துன்பம். "அலமகல் முத்தியுண்டாம்" (சூத. எக்கிய. பூ. 2: 8). அலக்கண்=துன்பம். (பிங்.).

அலம்—அலவு. அலவுதல்=வருந்துதல். "அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே" (சிலப். 18 : 17).

அலவு—அலகு=1. வளைந்த குறடு. 2. உயிரிகளின் கொடிறு. "அரணை அலகு திறக்காது." (பழமொழி). 3. தாடை. 4. வளைந்த நெற்கதிர். "அலகுடை நீழலவர்" (குறள். 1034).

அலகு—அலக்கு=துறட்டுக் கோல்.

உல்—அல்—அல்லல்=துன்பம். "அழிவின்கண் அல்ல லுழப்பதாம் நட்பு" (குறள். 787).

ம. அல்லல். க. அல்ல. தெ. அல்லரி.

அல்—அல்லா. அல்லாத்தல்=துன்ப முறுதல்.

"வயவுநோய் நலிதலி னல்லாந்தார்" (கலித். 29).

அல்லாடுதல்=1. அலைதல். 2. தொந்தரவு படுதல்

தெ., க. அல்லாடு.

அல்—அல்லை=துன்பம். அல்லைதொல்லை=மிக்க துன்பம்.

அலத்தல்=1. துன்ப முறுதல். "அலந்தாரை யல்லனோய் செய்தற்றால்". (குறள். 1303). 2. வறுமைப் படுதல். "அலந்தவர்க் குதவுதல்". (கலித். 133).

அலந்தோன் = துன்பமடைந்தவன். (திருமுரு. 271). கறிக்கு அலந்தவன் என்பது உலக வழக்கு.

அலந்தை=துன்பம். அலந்தை — அரந்தை= துன்பம். அலந்தலை=1. துன்பம். (திவா.). 2. கலக்கம். "இவன் பேச்சும் அலந்தலையாய்" (திவ். பெரியாழ். 3 : 7 : 1).

அலங்குதல்=1. அசைதல். "அலங்குளைப் புரவி" (புறநா. 2). 2. மனந் தத்தளித்தல். 3. இரங்குதல் (பிங்.). ம. அலங்ங. து. அலங்கு. தெ., க. அல்கு.

அலங்கல்=அசையும் பூமாலை. அலக்குதல்=அசைவித்தல். "சங்கலக்குந் தடங்கடல்வாய்" (தேவா. 739 : 3).

அலக்கழிதல்=வருந்துதல். "நானலக் கழிந்தேன்" (தேவா. 507 : 3).

அலக்கழித்தல்=1. அலைத்து வருத்துதல். (பணவிடு. கண்ணி. 177). 2. கெடுத்தல். "தக்கன் பெருவேள்வியங் கலக்கழித்து" (தேவா. 236 : 1).

அலசுதல்=(செ. குன்றிய. வி.) 1. அலைதல். "இறு நுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு" (மணி. 9 : 7). 2. வருந்துதல். "திருஷ்டம் பலச நோற்கின்றான்" (கம்பரா. சூர்ப்ப. 18). 3. சோர்தல்.

ம. அலசுக. தெ., க. அலச்சு.

(செ. குன்றா வி.) 1. ஆடையை நீரிற் கசக்கிக் கழுவுதல். 2. வாயடங்குமாறு திறம்படக் கடிந்து பேசுதல். அவனை நன்றாய் அலசிவிட்டான். (உ. வ.).

து. அலசு. தெ., க. அலச்சு.

அலசடி=துன்பம்.

அலம்புதல்=(செ. குன்றிய வி.) அலைதல். "வண்டலம்புஞ் சோலை" (திவ். திருவாய். 2 : 8 : 11). (செ. குன்றா வி.) 1. அலைத்தல். (திவ். பெரியாழ். 4 : 2 : 1). 2. கழுவுதல். "வடிம்பலம்ப நின்றான்" (புறநா. 9, உரை).

அலப்புதல்=1. வாயசைத்தல். 2. வீண் பேச்சுப் பேசுதல். 3. பிதற்றுதல். "அலப்பிய தக்கன் பெருவேள்வி" (தேவா. 236 : 1).

அலுங்குதல்=சிறிது அசைதல். அலுக்குதல்=சிறிது அசைத்தல்.

அலுங்கு — அனுங்கு. அனுங்குதல் = 1. அசைதல். 2. வருந்துதல். "பஞ்சனுங் கடியினார்" (சூளா. நகர. 25).

அலுக்கு — அனுக்கு. அனுக்குதல் = 1. அசைத்தல். 2. வருத்துதல்.

அல்- அலு. அலுத்தல்=1. அசைதல். 2. களைத்தல். 3. சோர்தல். அலுத்துப் புலுத்து=மிகக் களைத்து.

க. அல. தெ. அலயு.

அலுப்பு= தளர்வு, களைப்பு.

ம., தெ., க. அலுப்பு.

அலு—அலுவல்=1. உடல் தளரச் செய்யும் வேலை. 2. வேலை. "சமயமிதுவென் றலுவலிட்டு" (மீனாட்சி. பிள்ளைத். 70).

அல்—அலை. அலைதல்=1. அசைதல். "அலைந்தன நாகம்" (கந்தபு. முதனாட். 50). 2. திரிதல். "புசிப்புக் கலைந்திடல்" (தாயு. சித்தர். 5). 3. வருந்துதல்.

ம., தெ. அல., க., துளு. அலெ.

அலைத்தல்=1. அசைத்தல். "காலலைத் தலைய வீழ்ந்து" (திருவிளை. பழியஞ். 8). 2. அலையச் செய்தல். 3. வருத்துதல். "பெருமுலை யலைக்குங் காதின்" (திருமுரு. 50). 4. அடித்தல். (கலித். 128). ஆறலைத்தல்=அடித்து வழிப் பறித்தல். வன் கண்ண ராட்டிவிட் டாறலைக்கு மத்தம்" (ஐந். ஐம். 34).

அலைச்சல்=1. திரிதல். 2. நீள்வழிச் சென்ற வருத்தம்.

அலை=அலைந்து செல்லும் நீர்த்திரை.

ம., தெ. அல. க., துளு. அலெ.

---

### உத்திக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தா

"......மொழி முதல் உகரத்தின் திரிபாக அகரமும் எகரமும் வருதலையும், எல்லாச் சொற்கும் காட்டப்படும் பொருள் இன்றும் இருவகை வழக்கிலும் வழங்குவதையும் இவற்றுள் எதுவேனும் எவையேனும் வடமொழிச் சென்று வழங்கினால் அவை தமிழினின்று அங்குச் சென்றன என்று கொள்வதல்லது வடமொழியினின்று தென்மொழிக்கு வந்தன என்று கொள்வது ஒரு சிறிதும் உத்திக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தாதென்பதையும் தெற்றெனக் கண்டுகொள்க."

**—ஞா. தேவநேயப் பாவாணர்**

*சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், பக். 120.*

# மந்திரத்தில் மருத்துவம்

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

## மூலன் உடலிற் புகுந்த முனிவர்

என்னருமைத் தமிழர்களே,

தமிழுக்குத் தனிச் சிறப்பாயது திருமந்திரம்.—பத்தாந் திருமுறை. இதை அருளியவர் சித்தர் சிங்கமான சுந்தர நாத மூலர். முதிய சுந்தரர் இமயத்திலிருந்து நாடெல்லாம் சுற்றித் தமிழகம் புகுந்து காவிரிக் கரையில் உள்ள சாத்தனூரில் நிட்டை கூடினர். அது பசுமைப் பொலிவுற்ற நல்லூர். அங்கே மூலன் என்ற இடையன் மாடு மேய்க்கையில் அரவந் தீண்டி இறந்தான். அவனது இளவுடலில் சுந்தரர் புகுந் தெழுந்தார். முதிய முன்னுடல் மண்ணுயிற்று. புதிய மூலன் உடலிற் புகுந்த முனிவர் **திருமூலர்** என்ற பெயருடன் திரு ஆவடு துறையில் அரச மரத்தடியில் நிட்டையில் ஆழ்ந்தார். நெடுந் தவம் புரிந்து தாம் கண்ட அருளுண்மைகளையே 3070 மந்திரங்களாகக் கோத்தார். அவை ஒன்பது தந்திரங் களாக வகுக்கப்பெற்று நவதந்திர சாத்திரமாகப் புகழ் பெற்றது. இந்த ஒன்பது தந்திரங்களிலும் ஒன்பது ஆகமங்கள் அடங்கின :

1. முதல் தந்திரம் **காரணாகமம்**. மக்கள் நன்மையுடன் பல்லாண்டு வாழும் குறிப்புக்களைச் சொல்லும்.

2.. இரண்டாவது தந்திரம் **காமிக ஆகமம்**. உடற்கூறு, கருவுயிர்த்தல், உள்நாடிகள், சுரப்பிகள், நீளாயுள், வாழும் வகை, யோகியர் உறவு—முதலியவற்றை விளக்கும்.

3. மூன்ருவது தந்திரம் **வீராகமம்**. இஃது அட, ராச, தியான சமாதி யோகம், அட்டாங்கசித்தி, காயசித்தி, கேசரி முத்திரை, சந்திரயோகம், பரியங்கயோகம், விந்து ஒளியாகி உடல் ஒசும் தேசும் பொலிய வாழும் வகையைக் குறிக்கும்.

4. நான்காவது தந்திரம் **சிந்தாகமம்**. யந்திர மந்திர தந்திர நுட்பங்களுடன் மகாகுண்டலியால் பெறும் சித்திகளைத் துலக்கும்.

5. ஐந்தாவது தந்திரம் **வாதுளாகமம்**. சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய சித்தாந்த சாதனங்களை விளக்கும்.

6. ஆருவது தந்திரம் **வியாமளாகமம்.** தவநெறி விளக்கம், குருலிங்க சங்கமம், அங்கலிங்க ஐக்கியம், மெய்த் துறவு, தன்னறிவு, வேதாந்த சித்தாந்த போதாந்த நாதாந்த யோகாந்த கலாந்தங்களை விளக்கும்.

7. ஏழாந் தந்திரம் **காலோத்தரம்.** முழுதும் தாந்திர யோக மரபுகள் அடங்கியது. இதில் யோக வொழுக்கம், ஆதார சக்கரங்கள், இலிங்க விளக்கம், நிறைவான சமாதி, சகசிராத சித்தி, சிவசக்தி விளக்கங்கள் காணும்.

8. எட்டாந் தந்திரம் **சுப்பிராகமம்.** வேதவேதாந்த விளக்கம் ஆகும். இதில் கரும, பக்தி ஞான யோக மரபுகள், முத்தி நிலைகள், நிறை சூனிய உபசாந்தம், பேரின்ப நுகர்வு முதலிய அரிய பெரிய யோகத் திறனுய்வுகளை அறிகிருேம்.

9. ஒன்பதாந் தந்திரம் **முக்தாகமம்.** பரவெளி, பரநாதம், உள்ளொளி, உள்ளின்பம், மெய்யறிவின்ப நிலைகள், ஐந்தெழுத்துப் பயிற்சி, கடவுட் பான்மைகளை விளக்கும்.

**ஞான சபையில் நிட்டை**

தாம் கண்ட இன்பத்தை உலகும் பெற வேண்டும் என்ற ஆர்வமுடன் திருமூலர் மந்திர நூலை யாத்தார். பலப்பல யோக முறைகளையும், யோகிகள் உறவையும் கண்டு கண்டு மேன்மேலும் யோகப் பயணம் தொடர்ந்த எனக்குத் திருமந்திரமே நல்வழி காட்டிற்று. நான் சகசிரார சித்தியும் மகாகுண்டலி சித்தியும் பெற்ற பிறகு 1920ஆம் ஆண்டு சிதம் பரம் சென்று ஒருநாள் முழுவதும் சிற்சபை முன்னே நடராசப் பெருமானைத் தியானித்திருந்தபோது இராமலிங்கப் பெருமான் ஒளியுருவம் தோன்றி வடலூருக்கு வழிகாட்டிற்று. நடந்தே சென்று ஞானசபையை அடைந்து அப்படியே நிட்டை கூடினேன். கோயிற் குருக்களும் சில துறவிகளும் என்பால் அன்புகொண்டு பால் பழம் அளித்தனர். உண்டபிறகு குருக்கள் வள்ளலார் கையெழுத்துப் படிகளைக் காட்டினுர்.

**சாகாக்கலை**

அவற்றுள் பெரும்பாலன அச்சில் வந்தவை. அச்சேருத ஒரு சுவடி கிடைத்தது. சாகாக்கலை. அத்தனையும் திருமந்திர விளக்கமே. அதன் கருத்துக்களை எனது யோகசித்தி யோக வியலில் வடித்தளித்தேன். அதனை வள்ளலார் சுத்தசாதனம் என்ற சித்த நூலைத் தழுவி எழுதியுள்ளார்.

'தேகாதிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே
சாகாத சத்திக் கலை.'

'கற்பூர தீபவொளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலை யேற்றச் சிரம்.'

இந்த இரண்டின் பிழிசாறே சாகாக்கலை விளக்கம். பிறப்புடலான பருவுடல் நுட்பம், சிறப்புடலான நுண்ணுடல் நுட்பம், ஓமுடல் நுட்பம், ஒளியுடல் நுட்பம், ஒளியுடல் பெற்றுப் பிணி மூப்புச் சாக்காடின்றி வாழும் வகை எல்லாம் திருமந்திரத்திற் காணும்.

## திருமந்திர விளக்கம்

இந்த அரிய நூலைத் 'திருமந்திர விளக்கம்' என்ற தலைப்பில் சன்மார்க்கம்—யோகசாதனம்—சித்தாந்த சித்தி என்ற மூன்று நூல்களாக எழுதினேன். இருபத்தைந் தாண்டுகள் மோனநிட்டை கூடித் திருமந்திர இரகசியங்களை ஆய்ந்தேன். அந்தக் காலம் எனக்குற்ற இடர்களும் தொல்லைகளும் பலகோடி. எவ்வாற்ருலோ உட்பொருள் விளக்க முற்றது.

## திருமந்திரம் பட்டபாடு

திருமந்திரத்தை ஆங்கில விளக்கத்துடன் உலகிற்கு அளிக்க ஆணை பிறந்தது. நான் தில்லி மருத்துவ—விஞ்ஞானக் குழுவில் யோகப் பகுதியில் அமைந்துள்ளேன். தில்லிக்கு ஆண்டுக்கு இருமுறை சென்று அறிஞருடன் கலந்து பேசுவதுண்டு. உலகில் உள்ள யோக நூல்களில் மிகச் சிறந்ததான திருமந்திரத்தை ஆங்கில விரிவுரையுடன் வெளியிடின் மருத்துவ விஞ்ஞானக் குழுவிற்குத் தனிச் சிறப்பளிக்கும் என்று குழுத் தலைவர்களுக்கும், அரசியல் தலைவருக்கும் நீண்ட விண்ணப்பம் செய்து, கூட்டத்திலும் மணிக்கணக்காக விளக்கிப் பேசினேன். எனது விண்ணப்பத்தை எல்லாருக்கும் அனுப்பினர். திருமந்திரம் தக்க நூலா என்று ஆராய ஒரு குழு அமைந்தது; அதில் இருந்தவர் இந்தி இருவர், ஆந்திரர் இருவர். இவர்கள் "இது தமிழில் உள்ளது; எங்களுக்குத் தெரியவில்லை" என்று ஓராண்டுக்குப் பிறகு நூலைத் திருப்பி விட்டனர். "அட சிவனே" என்று வருந்தி நான் சென்னை மருத்துவத் தலைவர் உத்தமராயரிடமும், சைவசித்தாந்தக் கழகம் சுப்பையா பிள்ளையிடமும் இன்னும் சில அறிஞரிடமும் நற்சான்று வாங்கி மருத்துவக்குழுவிற்கு வைத்தேன்.

"திருமந்திரம் உயர்ந்த யோக நூல்; அதில் மருத்துவமும் உண்டு; இதை ஆங்கிலத்தில் விளக்கினால் உலகுக்குப் பயனாகும். இதை நிறைவேற்றத் தக்கவர் சுத்தானந்த பாரதியாரே" என்று அறிஞர் சான்றுரைத்தனர். "இவர்களெல்லாம் தமிழறிஞரே—வடமொழியும் அறியும் ஒருவரிடம் அனுப்புவோம்" என்று குழுத் தலைவர் (அவர் மலையாளி) சென்னை ஆயுர்வேத மருத்துவரான ஐயரிடம் அனுப்பினார். நான் ஐயரைப் பார்த்துத் திருமந்திரத்திற்கு ஆக்கம் அளிக்க வேண்டினேன். "நான் ஞானியாரிடம் பாடம் கேட்டவன்; திருமந்திரம் அறிவேன்—உதவி புரிவேன்" என்றார்; மகிழ்ந்தேன். ஆனால், ஏமாற்றம்! ஐயர் "இது சைவர்களின் தோத்திர நூலே. இதில் மருத்துவமில்லை, விஞ்ஞானமில்லை; இதில் கடவுளுக்கு முறையீடுகளே உள்ளன—மருத்துவக் குழு இதை ஆராய்தல் தகாது" என்று சீட்டைக் கிழித்துவிட்டார். நான் மருத்துவக்குழுவுக்கு நீண்ட மறுப்பெழுதினேன். அதில் திருமந்திரத்தில் உள்ள மருத்துவ நுட்பங்களையும் யோகச் சிறப்புகளையும் தக்க கோட்பாடுகளுடன் விளக்கினேன். அவற்றையும் சுற்றியனுப்பினர். அதன்பிறகு ஒரு கன்னட மருத்துவரிடம் நூலை அனுப்பினார் குழுத் தலைவர். அவர் ஏனுமாடுதாரோ......கொத்தில்ல......(என்ன செய்கிறாரோ தெரியவில்லை.)

## அந்தோ தமிழே!

அந்தோ தமிழே! அந்தோ மந்திரமே! அந்தோ தமிழரே! அந்தோ அந்தோ!! நமது விதி இப்படி எதிர்ப்புகளுடன் மோதி யலைகிறதே ......தமிழ்த் திருமந்திரத்தின் தலைவிதி தில்லியிலா முட்டி மோத வேண்டும்! இனி இறைச் சார்புடனே எழுதுவேன்! என்று முனைந்தேன்..... இரத்தக் கண்ணீரில் எழுதுகோலைத் தோய்த்தேன்.

"Maxims of Mulayoga" என்ற நூலை நானே ஆங்கிலத்தில் எழுத முனைந்தேன். இந்நூல் முற்றுப்பெற ஐந்தாண்டுகள் ஆகும். ஐந்தாண்டுகளும் நிட்டையிலிருந்து உள்ளெழுச்சியாலேதான் நூல் நிறைவேறவேண்டும். அந்த ஐந்தாண்டிற்கும் என்னுடல் தேவைகளை யாராவது உதவ வேண்டும். எனக்கு யோக சமாசப் பொறுப்புள்ளது. நான் எழுத எழுதத் தட்டச்சடிக்க ஒருவர் துணை வேண்டும். அவருக்குச் சம்பளம் தரவேண்டும். திருமந்திரத்திற்குத் துணை செய்யும் இருநூறு நூல்களை வடமொழி, ஆங்கிலம், தெலுங்கு, பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வாங்கி ஆய

வேண்டும். சில பாடல்களுக்குப் படம் வரைந்து விளக்க வேண்டும். அறிவறிந்த புலவர்களுடன் கலந்து ஆய வேண்டும். இந்த ஆய்வுக்கு வேண்டிய கருவிகளை எம்முறையில் எவரிடம் பெறுவது? இனித் தமிழரிடமே பெறமுயலல் வேண்டும். தமிழகத்தில் எத்தனையோ மடாதிபதிகள், படாதிபதிகள், மாளிகைச் செல்வர், மளிகைச் செல்வர், தொழிற் செல்வர், எழிற் செல்வர் உள்ளனர். அவர்கள் விரும்பி முன்வந்து உதவலாம். தமிழக அரசு உதவலாம். எவ்வாறு உதவி வருமோ அறியேன். இதுகாறும் ஏதோ எழுதுகோல் வடித்ததைக் கொண்டு பேசாத் தொண்டு பரவுகிறேன். எனது தேவை நிறைவைத் தமிழருக்கே விட்டுவிடுகிறேன்.

**அம்பலவாணன் அருளுக**

எவ்வாறேனும் Maxims of Mulayoga வை எழுதி அம்பல வாணன் நடராசப் பெருமான் திருவடியில் படைத்து விடுகிறேன். அம்பலவாணன் அருளுக! அவனது திருவுள்ளம் செயற்படுக. என்னை இம்முயற்சியில் ஊக்கிய ஒருவர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளையே. திருக்குறள், பெரியபுராணம் இரண்டையும் ஆங்கிலமாக்கிய பிறகு அவரே "திருமந்திரம் ஆங்கிலம் எழுதுங்கள்" என்று ஊக்கினர். எனது திருமந்திர விளக்கம் மூன்று நூல்களையும் அவரே வெளியிடுகிறார்.

திருமந்திரத்தில் மருத்துவ நுட்பம் இல்லை என்று இடித்துக் காட்டிய ஆளுக்குப் படித்துக் காட்டியும் பயனில்லை. என்னருமைத் தமிழரே உங்களுக்கு விளக்குகிறேன். தமிழனுக்கு உணர்ச்சியிருந்தால் திருமந்திரத்தை உலகிற்கு விளக்கும் முயற்சிக்குக் கைதருக. இன்றேல் ஆண்டவன் அருளை நம்பி அறிவுச் சுரங்கத்தில் இறங்குகிறேன்.

## 2. தமிழில் மருத்துவம்

தமிழில் பல அரிய சித்த வைத்திய நூல்கள் உள்ளன. அகத்தியர், தேரையர், போகர், மூலர், ஞானவெட்டியான் முதலிய சித்தர் 4444 மூலிகைகளைக்கொண்டு அரிய மருந்துகளை ஆக்கி மாந்தர் நோயற்று நூறாண்டு வாழ வழிவகை செய்தனர். இவர்கள் எல்லாம் செய்யுளில் எழுதிவைத்தனர். அவை ஒன்றுகூட உலகமொழியில் இல்லை; தமிழ் மருத்துவம் இருட்டில் உறங்குகிறது. ஆங்கிலத்தில் நமது சித்த வைத்திய நூலே இல்லை. திருமந்திரம் முடிந்ததும் Lights on Siddhotheraphy என்னும் நூலுக்குப் பிள்ளையார் சுழி போடு

வேன். சித்த வைத்தியத்தில் மருத்துவ நுட்பங்களெல்லாம் இணைக்கவுள்ளேன்.

**சித்தமுறை**

மேனாட்டு மருத்துவம் பருவுடற் கூறைக் கொண்டு வகுக்கப்பெற்றது. நமது சித்தர் மருத்துவம் நுண்ணுடல் நாடிகளையும் ஆதார கமலங்களையும் சார்ந்தது. இது நாடி யோகமுறை. கைநாடி பார்த்தே வாத பித்த சிலேத்துமக் கூறுகளை நம்முடைய மருத்துவர் அறிவர். குருதிப் பாய்வின் துடி பார்த்தே நோயைக் கணிப்பர்.

*"துலைப்பட்ட நாடியைத் தூவழிசெய்தால்*
*விலைக்கு உண்ண வைத்தோர்*
*வித்தது வாமே"*

என்பது சித்தர் வாக்கு.

வாசியோகத்தால் நாடி சுத்தி செய்து துலாக்கோல் போலச் சமநிலையில் நிறுத்தினால் அரிய சத்தியுண்டாகும். அதனால் தாமும் இன்புறலாம்; பிறரும் இன்புறச் செய்யலாம். தாம் உண்ணவைத்த நெல் தமக்கு உதவும்; விலைக்கு விற்க வைத்தது பிறருக்குப் பயனாகும். தாமும் பிறரும் நோயற்ற வாழ்வு வாழலாம்.

தேவருக்கும் நாடிசுத்தியால் பூரண சக்தியுண்டாகும் என்கிறார் மூலர். இவ்வாறு தமிழ் முறை மருத்துவம் நாடி சுத்தி; ஆதார மலர்ச்சி, குண்டலி ஓட்டம் இவற்றைக் கொண்டு திட்ப நுட்பமாக விரிந்து நிற்கிறது. திருமூலர் நாத விந்துகள் கூடிக் கருவுயிர்க்கும் கலையைக்கூட யோகமாக்கித் தருகிறார். நன்மகவு பிறக்கும் நுட்பத்தையும் விளக்குகிறார்.

## 3. கருவுயிர்த்தல் (Embryology)

உயிரிற் கலந்த இறைவன் நிறைமுறையான தூய காதலால் ஆண்பெண் கலப்பை ஊக்கி, உடல், உயிர், மனம், அறிவு, இன்பம் ஆகிய ஐந்து கோசங்களையும் 24 ஆத்தும தத்துவம் 7 வித்தியா தத்துவம் 5 சிவதத்துவம் ஆக முப்பத்தாறு தத்துவங்களையும் உணர்ச்சி கொள்ளச்செய்து, கருவுயிர்க்கச் செய்கிறான்.

*" ஏகத்துள் ஆங்கே*
*இரண்டு எட்டு மூன்று ஐந்து*

மோகத்துள் ஆங்கொரு
முட்டைசெய் தானே."

ஒன்பது கழிவாய்களைக் கொண்ட இவ்வுடல் துன்பக் கலசமே. மண்சட்டி சூளைத் தீயில் வெந்து இறுகுவதுபோல், இவ்வுடலும் மூலத் தீயில் வெந்து உருவாகிறது.

" ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே "

உடம்பு எப்படி உண்டானது? அதன் பெருங் குணங்கள் என்ன? தாமத குணங்களினின்று நற்குணங்களைப் பிரித்து அறிவதெப்படி? நற்குணப் பயிற்சியால் வரும் சித்திகள் என்ன? இந்த உடலுக்குச் செல்வம், வறுமை, நரைதிரை, பிணி மூப்பு, சாக்காடு ஆகிய ஆறு துன்பங்கள் வருவதெப்படி? பத்துத் திங்களில் கருமுதிர்ந்து, பிண்டமாகி உயிர்கூடி உடல் எப்படிப் பிறக்கிறது என்பதை அறியீர்.

" அறியீர் உடம்பினி லாகிய ஆறும்
பிறியீர் அதனிற் பெருகுங் குணங்கள்
செறியீர் அவற்றினுட் சித்திகள் இட்ட
தறிய ஈரைந்தினுள் ஆனது பிண்டமே."

மாந்தர்காள், உங்கள் உடம்பை ஆயுங்கள். அதில் வளமை, வறுமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய ஆறும் பருவுடலியல்பாயுள்ளன, அவற்றைப் பிரித்துப் பெருங் குணங்களைப் பேணி வளருங்கள். அல்லதை விட்டு நல்லதைப் பற்றிடுங்கள். பத்து மாதங்கள் வளர்ந்து பிண்டம் பிள்ளையாகி வெளிவருகிறது. கருவிலே திருவுள்ளது; அதுவே சித்திகளைத் தரும்.

இந்தப் பாட்டில் நல்ல பிள்ளைப் பேற்றின் இயல்புள்ளது. பெற்றோர் நல்லபடி வாழ்ந்து, தாதுக்கள் வளம் பெறக் கூடினால், நல்ல பிள்ளைப் பேறுண்டாகும். இயற்கை நுகர்ச்சி, மரபு வளர்ச்சி இரண்டும் உயிரியல்பாகும். மரம் முதல் மாந்தர் வரையில் மரபுணர்ச்சியுள்ளது. செடிகளில் பூ நிறமும் மணமும் பொலிவுற்றிருந்தாலே நல்ல காய் காய்க்கும். ஆண் பூவின் அழகும், நிறமும், மணமும் தேனும் வண்டுகளைக் கவரும். அவை தேனருந்தும்போது பூந்தூள் அவற்றின் காலில் ஒட்டிக் கொள்ளும். அவை பெண் பூவின் பூங்குழாயில் பூந்தூளைப் புகுத்தித் தேனருந்தும். பூந்தூள் கருப்பையை மருவும்; காயாகிக் கனியாகி, விதையாகி மரபை வளர்க்கும்.

அவ்வாறே ஆண் வீறும், பெண் வீறும் மருவி; பெருகி 280 நாள்கள் கருப்பையில் வளர்ந்து குழந்தையாகத் தலைகீழாக அடி முறை வழியாக வெளிவருகிறது. கருப் பிண்டத்தை, கருக்குடை (Placenta) நஞ்சுக்கொடி (umbelical cord) இரண்டும் பாதுகாக்கும். இவற்றின் வாயிலாகத் தாயுண்ணும் உணவுச் சத்தால் ஊட்டம் பெற்றுப் பிண்டம் வளரும். முதல் மாதம் அரை அங்குலம், 1.3. கிராம் நிறை உள்ள பிண்டம் தலையும் வாலுமாக வளைந்து கிடக்கும். இரண்டாவது மாதம் ஓர் அங்குலம் 4 கிராம் கனம் இருக்கும். தலை உருவாகும். கைகால் முளைக்கும். மூன்றும் மாதம் எலும்புண்டாகும். உடல் 3.8 அங்குலம் 30 கிராம் கனம் இருக்கும். நான்காவது மாதம் மயிர் முளைக்கும். ஐந்தாவது மாதம் தலை பெருக்கும். உடல் 8 அங்குலம் 270 கிராம் நிறையாகும். குழந்தையின் உள்ளம் 120-140 தடவை துடிக்கும். ஆருவது மாதம் குழந்தை 12 அங்குலம் 600 கிராம் இருக்கும். ஏழாவது மாதம் கண் நிறைவாகும். எட்டாவது மாதம் 16 அங்குலம் 1570 கிராம் நிறையிருக்கும். ஒன்பதாவது மாதம் நகம், தோல், கொழுப் புடன் பெருகிப் பத்தாவது மாதம் 20 அங்குல நீளம் 3200 கிராம் கனத்துடன் முழுக் குழந்தை பிறக்கும். உடலை அமைத்து அதில் உயிரை வைத்து, ஒன்பது வாயில்களை வைத்து மானிடத்தை இறைவன் அமைக்கிருன். அதன் உச்சியில் சென்னியுள் சகசிராரத் தாமரையை வைத்தான். கடையில் மூலாதாரத்தில் குண்டலிக் கனலை வைத்தான். அந்த ஈசனைக் கைகலந்து நலம் பெற்றேன். கை என்பது ஒழுக்கம், இடம், ஒப்பனை, பக்கம், வரிசை என்ருகும். கைகலப்பதாவது யோக ஒழுக்கத்தால் இறைக் கலப்பெய்தல்.

*"உடல் வைத்த வாறும் உயிர் வைத்த வாறும்*
*மடை வைத்த ஒன்பது வாய் தலும் வைத்துத்*
*திடம் வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்*
*கடை வைத்த ஈசனைக் கைகலந் தேனே"*

இறைவன் என்றும் கெடாத பெருஞ்சுடரை, ஆன்மச் சுடரை மூட்டுகிருன். கருக் குழம்பைக் கூட்டுகிருன். கருவில் உருவான இந்தக் காயப்பையில் எத்தனை தத்துவங்களை இறைவன் வைத்திருக்கிருன். மனம், வாய், உடல் என்று முக்கரணங்களை ஆக்கி அவற்றில் ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்தும் இணைத்தான்.

குழந்தை ஆணு பெண்ணு அலியா என்று அறியும் வகை வகுக்கிருர் மூலர். காதலர் கலவியில் ஆண் வலுவுற்று

வலப்பால் மூச்சு மிகுந்து யோனியின் வலப்புறம் விந்தினை விட்டால் ஆண் பிறக்கும். இடப்பால் மூச்சு மிகுந்து இடப் புறம் விந்தினை விட்டால் பெண் குழந்தை பிறக்கும். இடை பிங்கலை நாடியில் மூச்சு ஒத்திருந்தால் அலி பிறக்கும். நாடி சுத்தியுடன் உயிர்ப்பொழுங்குடன் திண்மையிற் பிறக்கும் ஆண் சேய் உலகை ஆளும். விந்து திண்மையுற்று இறுகினால் கருக்குழியிற் பாயாது. வெளிச் செல்லாது. அதற்குப் போகம் இருக்கும்' புதல்வன் இராது.

"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தாரணி முழுதாளும்
*பாணவம் மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே."

(தொடரும்)

---

## உடம்பும் உயிரும் அழிவின்றித் திகழ

மூலத்திலுள்ள அனலே உடம்பினிருப்புக்கும் அழிவுக்கும் ஏதுவாய் நிற்றல் நன்கு விளங்கா நிற்கும். இத்துணைச் சிறந்த தாகிய மூல அனலிலே இறைவனது ஒளி வடிவை அகக் கண்ணால் விளங்கக் கண்டு அதன்கண்ணே நினைவைப் பதித்து உள்ளம் உருக வல்லார்க்கு அவர்தம் உடம்பும் உயிரும் அவ்வொளியினால் ஊடுருவப்பெற்று அழிவின்றித் திகழும். இஃது,

"எருவிடும் வாசல் இருவிரல் மேலே
கருவிடும் வாசல் இருவிரற் கீழே
உருவிடு சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடு சோதி கலந்து நின்றானே."

என்னும் திருமூலர் திருப்பாட்டால் நன்கறியப்படும்.

—மறைமலையடிகள்

சைவசித்தாந்த ஞானபோதம், பக். உ0க.

---

*பாணவம் - திண்மை.

# இயற்கை, கலை, கணிதம்

[ம. ச. ஆனந்த் M.Sc., A. I. S. M.]

இயற்கை, கலை, கணிதம் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையன.

இயற்கையில் மலர்களின் இதழ்கள், உடுமீனின் (Star - fish) உடல் ஆகியவை ஐந்து பக்கங்களைக் கொண்ட சீரான ஐங்கோண உருவம் (Pentagon) அல்லது, சீரான அறுகோண உருவம் (hexagon) அல்லது, ஏதோ ஒரு சீரான பல்கோண உருவமாக (regular polygon) அமைந்துள்ளமை காணலாம்.

சீரான அறுகோண உருவம் இயற்கை யன்னைக்கு மிகவும் பிடித்தமான, ஒன்று. இந்த உருவம் பனிக்கட்டிப் படிவங்களிலும் பெருவண்டுகளின் கண்ணின் அணுக் கூறுகளிலும் (cells), தேனடைகளிலும், மற்றும் பலவற்றிலும் காணப்படுகிறது. தேனீக்கள் தேனடைகளைக் கட்ட அறுகோண உருவத்தைத் தேர்ந்தெடுத்துள்ளதால் அவை அழகை மட்டுமன்றிச் சிக்கனத்தையும் போற்றிக் கடைப்பிடித்துள்ளதைக் கணித முறையில் உறுதிப்படுத்தியுள்ளனர். ஏனெனில், மிகக் குறைந்த அளவு மெழுகைக் கொண்டே மிகு பேரளவு தேனைத் திரட்டிவைக்க ஆறு சுவர்களை உடைய அறை அமைப்பே சிறந்தது. முற்போக்கான ஒரு கட்டடக்கலை வல்லுநர் வருங்கால வீட்டு வசதித் தேவைக்குத் தீர்வுகாண அறுகோண உருவ அறைகளைக் கொண்ட கட்டடக் கோவைகளையே பயன்படுத்த வேண்டும் என்பதைச் செயல்முறையில் காட்டியுள்ளார்.

சுருள் வடிவம் (spiral) இயற்கையில் நிறையக் காணப்படுகிறது. கிளிஞ்சில்கள், விலங்குகளின் கொம்புகள், நெபுலாக்கள் (nebulac) ஆகிய பலவற்றிலும் சுருள் வடிவம் காணப்படுகிறது.

இனி இந்த உருவங்களிலிருந்து பெறப்படும் கணிதக் கூறுகளையும் அவை இயற்கையில் எவ்வாறு விரவியுள்ளன என்பதையும் காணலாம்.

பத்துப் பக்கங்களைக் கொண்ட பதின்கோண உருவம் (decagon) ஒன்றின் ஒரு பக்கத்தையும் அவ் வுருவத்தின் ஆரத்தையும் அருகருகே வைத்தோமானால் அப்பக்கத்தின் நீளமும் எஞ்சி நிற்கும் ஆரப் பகுதியின் நீளமும் 5 : 3 என்ற அளவில் இருப்பதைக் காணலாம். இதையே "பொற் பங்கீடு" (golden section) என்பர். இந்தக் கூறு இயற்கையில் விந்தை

யான வகையில் பெருவாரியாக இயங்குவதால் இதை 'அருளுறவுக் கூறு' (divine proportion) என்று குறித்தனர்.

இயற்கையில் காணப்படும் அருளுறவுக் கூற்றினை விளக்கு முன் 'ஃபிப்போனுசி எண்கோவை' (Fibonacci sequence) என் பதைப் பற்றித் தெரிந்து கொள்வோம். ஃபிப்போனுசி என்னும் இத்தாலியக் கணித அறிஞர் 13 ஆம் நூற்றுண்டில் பின்வரும் கணக்கை வெளியிட்டார். ஒவ்வோர் இணை முயல்களும் ஒவ்வொரு திங்களும் ஓரிணை முயல் குட்டிகளை ஈனுவதாகவும், குட்டிகள் இரண்டாம் திங்கள் முதல் தாமும் குட்டிகளை ஈனத் தொடங்கும் என்றும் வைத்துக்கொண்டால் ஓரிணை முயல்களின் வழி ஓராண்டில் எத்தனை இணை முயல்கள் கிடைக்கும்?

ஒவ்வொரு திங்கள் இறுதியிலும் உள்ள இணைகளின் எண்ணிக்கை: முதல்—1; இரண்டாவது—1; மூன்ருவது—2; நான்காவது—3; ஐந்தாவது—5. இவ்வாருக 1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34, 55, 89, 144.

இதில் ஓர் எண் அதன் முன்னுல் உள்ள ஈரெண்களையும் கூட்டுவதால் கிடைக்கும். மேலும், இந்த எண்கோவையில் எந்தத் தொடர் இணைகளின் எண்களிடையே யுள்ள கூறளவும் ஒன்ருகவே இருப்பதுடன் அது பொற்பங்கீட்டுக்கு ஏறத்தாழ ஒப்பாகவும் இருக்கிறது.

34, 55, 89, 144 ஆகிய தொடர் எண்களை எடுத்துக் கொள்வோம். $34/55=0{\cdot}618+$ ; $55/89=0{\cdot}618+$ ; $89/144=0{\cdot}618+$.

இனி ஃபிப்போனுசி எண் கோவையில் உள்ள எண்கள் தாவர வளர்ச்சியில் மிகுதியாகக் காணப்படுவதை நோக்கு வோம்.

'டெய்சி' (daisy) என்னும் பூவிலுள்ள இதழ்க் கோவை வளைவுகள் இரண்டு பிரிவுகளாக உள்ளன. இவ் வளைவுகள் ஒரு பிரிவில் 13 ஒரு புறமாகவும், மற்ரென்றில் 21 மறுபுறமாக வும் அமைந்துள்ளன. சூரியகாந்திப் பூவின் மையத் தட்டில் உள்ள குறும் பூக்கள் (florets) ஒரு திசையில் 34 ஆகவும், மறு திசையில் 55 ஆகவும் அமைந்துள்ளன. இவையே சில பூக்களில் 89, 144 ஆக அமைவதும் உண்டு. இவை அருளுறவுக் கூறளவில் உள்ளன.

'சர்ச்' (church 1901) என்பவர் இந்த இயல்பை விளக்கி யுள்ளார். இவர் இரு மடக்கை (logarithmic) சுருள் வளைவு வரிசைகளை ஒன்றை யொன்று எதிர் எதிராக வெட்டும்படி

அமைத்து டெய்சி, சூரிய காந்திப்பூ, தாவரக் கூம்புகள் (cones) ஆகியவற்றின் வளர்ச்சியை விளக்கினர். ஒரு திசையிலுள்ள சுருள் வரிசையின் சுருள்களின் எண்ணிக்கையும் அதற்கு எதிர்த் திசையிலுள்ள சுருள் வரிசையின் சுருள்களின் எண்ணிக்கையும் 'பொற் பங்கீட்டு அளவை'யில் அமைந்துள்ளன. இவ்வாறு இச் சுருள்கள் வளைகோட்டுச் செவ்வகங்களின் (Curvilinear rectangles) வரிசைகளாக அமைந்துள்ளமையும் காணலாம். இவற்றினுள் வட்டங்களை வரைந்தால் தாவரங்களில் காணும் இயற்கை வளர்ச்சியின் முறைமையை நன்கு உணரலாம்.

தாவரங்களின் சுருள்மைப்பும் 'நாட்டிலஸ்' (nautilus) என்னும் ஒருவகைச் சங்கின் சுருள் அமைப்பும் சமனிலை மின்சாரக் கோடுகளின் அமைப்புக்கு (electrical lines of equipotential) ஒப்பாகும் என்று 'சர்ச்' எண்ணினர். உயிர்ச் சக்தியும் மின் சக்தியும் ஒன்றேபோல் விளங்குவதாக அவர் கருதினர்.

இவ்வாறு இயற்கை யன்னையின் கலையுணர்ச்சிக்கும், கணிதத்துக்கும் தொடர்பு உள்ளதுபோலவே மனிதனின் கலைப் பண்பாட்டிலும் கணிதம் அடிப்படையாக உள்ளதைக் காணலாம். சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து, பாபிலோன் ஆகிய நாடுகளின் கட்டடக் கலையில் பொறியியல் உருவக்கணிதம் (engineering geometry) சிறப்படைந்து விட்டது. கற்கால மனிதர்களும் (சுமார் கி. மு. 20,000) தாம் இயற்கையில் கண்ட உருவங்களை உருவக் கணிதத்தின் அடிப்படையில் கையாண்டுள்ளதே இக்கலை வளர்ச்சியின் துவக்கம்.

பண்டைய மனிதனின் ஆடை, கட்டடம், அணிகலன், மட்பாண்டம் ஆகிய பொருள்களின் படைப்பிலிருந்து அவனுடைய உருவக்கணித அறிவு வெளிப்படுகிறது. பண்டைய கலையிலும் தொழில் நுட்பத்திலும் அடிப்படையாக விளங்கிய உருவங்களே இன்றும் சிறந்தனவாக விளங்குவதை நோக்கவேண்டும்.

வரலாற்றுக் காலத்தில் சற்று அண்மையிலுள்ள பண்டைக் கலைகளில் மேலே கண்ட அருளுறவுக்கூறு பெரிதும் கையாளப் பட்டிருக்கிறது. பண்டைய மூதோவியர்களும் (old masters) கிரேக்கக் கலைஞர்களும் இதைப் பயன்படுத்தினர்.

'பைடியாஸ்' (Phidias) எனப்படும் கிரேக்கச் சிற்பி தயாரித்த 68 அங்குல உயரமுள்ள சிலையினை அழகிய ஒரு

மனிதனுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வோம். அவனுடைய உறுப்புக்கள் பின்வரும் கூறுகளில் உள்ளன. தரையிலிருந்து கொப்பூழ் வரை 42″; கொப்பூழ் முதல் தலை உச்சி வரை 26″; தலை உச்சி முதல் மார்புகளின் கோடு வரை 16″; மார்புகள் முதல் கொப்பூழ் வரை 10″. 10/16=5/8; 16/26=8/13; 26/42=13/21; 42/68=21/34. 5, 8, 13, 21, 34 ஆகியவை பொற்பங்கீட்டுக் கூற்றளவில் (அஃதாவது 5:3) உள்ளதைக் காணலாம்.

ஆனால், அப் பெருஞ் சிற்பிகளும், ஓவியர்களும் பொற் பங்கீட்டுக் கூற்றளவினைக் கருத்தில் கொண்டே அவர்களின் கலைப் படைப்பில் ஈடுபட்டிருப்பார்கள் என்று கூற முடியாது. ஏனெனில், ஒரு கலைஞன் எப்பொழுதுமே இயற்கையில் திளைத்து அதை முழுமையாகத் துய்க்கும் ஆற்றலைப் பெற்றிருப் பான். ஆகவே, இயற்கை கையாளும் கூறுகள் அவனை அறியாமலே அவனுள் ஊறிவிடுகின்றன. கலைத்திறன் என்பது கண்ணுக்குப் புலப்படுவனவற்றை அப்படியே பின் பற்றி அவற்றைப் போலவே உருவாக்குவதில் அமைவதில்லை. ஆனால், அஃது இயற்கை என்னும் இயக்கத்தின் காரணக் கூறு களையே அடிப்படையாகக் கொண்டது.

கிரேக்கர்கள் $1:\sqrt{2}$, $1:\sqrt{3}$, $1:\sqrt{4}$, $1:\sqrt{5}$ அல்லது பொற் பங்கீட்டுக் கூற்றளவான 5 : 3 ஆகிய கூறுகளைப் பெரிதும் விரும்பினர். கிரேக்க முறைப்படி ஓவியம், புகைப்படம், பூச்சட்டி, நினைவுச் சின்னம் மற்றும் எந்தக் கலைப் பொருளின் அளவும் மேற் குறிப்பிட்ட கூறுகளில் ஒன்றினையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பெரும்பாலான மக்கள் இயற்கையில் அதிகமாகக் காணப் படும் அருளுறவுக் கூற்றளவுகளைக் கொண்ட பொற் செவ்வக (golden rectangle) உருவில் உள்ள படங்கள், புத்தகங்கள், வாழ்த்து அட்டைகள், கண்ணாடிகள், பெட்டிகள் ஆகியவற்றை மிகுதியாக விரும்புகிறார்கள் என்று 'ஃபெச்னர்', 'உண்ட்' (Fechner, Wundt) ஆகிய உள நூலறிஞர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர். இதுவரை ஓவியர்களாலோ உள நூல் அறிஞர் களாலோ செவ்வனே விளக்கப்படாத ஏதோ காரணத்தால் பொற் செவ்வகமே பெரிதும் கலைக் கவர்ச்சி உடையதாக உள்ளது.

# திராவிட மொழிகளில் செய்யுந்து வாய்பாட்டு வினைகள்

[இரா. கோதண்டராமன். எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (மொழியியல்)

*மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]*

சங்க இலக்கியங்களில் வழங்கும் பலவகைப்பட்ட முற்று வினைகளுள் **செய்+உம்+து** என்ற வாய்பாட்டு அமைப்பினவாகிய **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளும் ஒருவகையாகும். எண்ணிக்கையில் மிகச் சிலவாகிய இவ்வாய்பாட்டு வினைகள் படர்க்கை ஒருமையனவாகி நிகழ்வெதிர்வுப் பொருண்மையினை உணர்த்துவனவாகக் கருதலாம். சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய புறநானூற்றில் இருபத்தைந்து வினைகள் **செய்யுந்து** வாய்பாட்டின்கண் நடைபெறுகின்றன. இவ்வினைகள் பற்றிய விரிவான செய்திகள் பின்வருமாறு:

| நூல் | பாடல் எண் | ஆசிரியர் | வினை | அமைப்பு |
|---|---|---|---|---|
| புறநானூறு | 24 | மாங்குடிகிழார் (பி. ம். மாங்குடி மருதனார்) | பாயுந்து<br>தூங்குந்து<br>தரூஉந்து<br><br>பாயுந்து | பாய் + உம் + து<br>தூங்கு + உம் + து<br>*தர் + ஊம் + து<br>*தரூஉ + உம் + து<br>பாய் + உம் + து |
| | 137 | ஒருசிறைப் பெரியனார் | ஒலிக்குந்து<br><br>பூக்குந்து | *ஒலிக்கு + உம் + து<br><br>*பூக்கு + உம் + து |
| | 339 | பெயர் இல்லை | பறிக்குந்து<br>உகளுந்து<br>குறாஉந்து | *பறிக்கு + உம் + து<br>உகள் + உம் + து<br>*குறு + ஊஉம் + து<br>*குறாஉ + உம் + து |
| | 343 | பரணர் | மறுக்குந்து<br>கலக்குறுந்து<br>சேர்க்குந்து | *மறுக்கு + உம் + து<br>கலக்குறு + உம் + து<br>*சேர்க்கு + உம் + து |

| நூல் | பாடல் எண் | ஆசிரியர் | வினை | அமைப்பு |
|---|---|---|---|---|
| புறநானூறு | 352 | பரணர் | கறக்குந்து<br>பறிக்குந்து | *கறக்கு + உம் + து<br>*பறிக்கு + உம் + து |
| | 380 | கருவூர்க் கதப் பிள்ளை | ஆகுந்து | ஆகு + உம் + து |
| | 386 | ஆவூர்கிழார் | நிலைக்குந்து<br>ஒலிக்குந்து | *நிலைக்கு + உம் + து<br>*ஒலிக்கு + உம் + து |
| | 395 | நக்கீரர் | ஆருந்து<br>பெயர்க்குந்து<br>இரீஇயுந்து | ஆர் + உம் + து<br>*பெயர்க்கு + உம் + து<br>*இரீஇய் + உம் + து |
| | 396 | மாங்குடிகிழார் | பூக்குந்து<br>ஒப்புந்து<br>இரியுந்து<br>தாங்குந்து<br>வழங்குந்து | *பூக்கு + உம் + து<br>ஒப்பு + உம் + து<br>*இரிய் + உம் + து<br>தாங்கு + உம் + து<br>வழங்கு + உம் + து |

புறநானூற்றில் மிகச்சில பாடல்களில் மட்டுமே வழங்கும் **செய்யுந்து** வாய்பாட்டு வினைமுற்றுக்கள் ஏனைய சங்க இலக்கியங்களில் வழங்குவனவாகத் தோன்றவில்லை. **உம் உந்து ஆகும் இடனுமார் உண்டே** (சொல் சேனாவரையம் 292) என்ற தொல்காப்பிய நூற்பா **செய்யுந்து** வாய்பாட்டு வினைகள் அமையுமாற்றைக் குறிப்பிட்ட போதிலும், இவ்வாய்பாட்டு வினைகள் சங்கப் பாடல்கள் போற்றிய இலக்கிய வழக்கில் செல்வாக்குடன் விளங்கியதாகத் தெரியவில்லை. இத்தகைய வாய்பாட்டு வினைகளின் பல முனை வளர்ச்சியைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**மலையாள நிகழ்கால வினைமுற்றுக்களும் செய்யுந்து வாய்பாட்டு வினைகளும் :** மெல்லொலியின் பின் அதற்கு இனமாகிய வல்லொலி நிகழும் போதும், அவ்வல்லொலி இனமெல்லொலியாகத் திரிந்தமையும் போக்கு திராவிடமொழிகளின் வளர்ச்சியில் பரவலாக நிகழ்ந்தனவாகக் கருதலாம். **கொம்பு, நம்பு** ஆகிய சொற்கள் தெலுங்கில் **கொம்மு, நம்மு** எனவும், **வந்து, நடந்து; கலங்கு, உறங்கு; மஞ்சு, குஞ்சு;** ஆகியவை மலையாளத்தில் முறையே **வந்நு, நடந்நு; கலங்ஙு, உறங்ஙு; மஞ்ஞு, குஞ்ஞு;** எனவும்

தமிழில் *மஞ்சை என்னும் சொல் மஞ்ஞை எனவும் திரிந்தமைவதைக் கருத்தில் கொள்ளலாம். இதனைப் பின்புலமாகக் கொண்டு மலையாளத்தில் நிகழ்கால வினைமுற்றுக்களாக வழங்கும் செய்யுந்நு வாய்பாட்டு வினைகளைச் செய்யுந்து வாய்பாட்டு வினைகளின் திரிபாகவே துணியலாம். மலையாள நிகழ்கால வினைமுற்றுக்களின் கால இடை நிலையைக் குறிப்பிடும்போது இன்று என்னும் இடைச்சொல்லே மலையாளத்தில் உந்நு எனத் திரிந்ததாகத் திராவிட மொழியியலார் கருதுகின்றனர். இக்கருத்து ஒலியியல் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

தமிழில் செய்யுந்நு வாய்பாட்டு வினைகள்: செய்யுந்து வாய்பாட்டினின்றும் திரிந்தமைந்த செய்யுந்நு வாய்பாட்டு வினைகள் மலையாளத்தில் நிகழ்கால வினைமுற்றுக்களாக வழங்கிய போதிலும், தமிழில் அவை முற்றுப்பொருண்மையை உணர்த்துவதற்கு மாருகத் தன்மைப்பன்மை விகுதியாகிய அம், முன்னிலை ஒருமை விகுதியாகிய ஐ, ஒன்றன்பால் நீங்கலாக ஏனைய படர்க்கை விகுதிகளாகிய அன், அள், அர், அ ஆகியவற்றை ஏற்று வினையாலணையும் பெயர்களாக வழங்கும் போக்கே காணப்படுகின்றது. இவ்வாறு இட விகுதி (Personal Terminations) களை ஏற்கும் போது செய்யுந்நு வாய்பாட்டு வினைகள் *செய்யுநு வாய்பாட்டினவாக ஒடுங்கிநிற்கின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இதனைத் தெளிவு படுத்தும்.

1. தன்மைப் பன்மை: அறியுநம் (புறம் 381·6)
   அமைப்பு: *அறியுநு-அம். *அறியுநு-<*அறியுந்நு -<*அறியுந்து <*அறிய்+உம்+து.

2. முன்னிலை ஒருமை: விடுநை (புறம் 36·1)
   அமைப்பு: *அடுநு-ஐ. *அடுநு- <*அடுந்நு <*அடுந்து <*அடு+உம்+து.

3. படர்க்கை ஆண்பால்: ஓம்புநன் (புறம் 215·7)
   அமைப்பு: *ஓம்புநு-அன். *ஓம்புநு-<*ஓம்புந்நு -<*ஓம்புந்து <*ஓம்பு+உம்+து.

4. படர்க்கைப்பெண்பால்: கேட்குநள் (அகம் 63·19)
   அமைப்பு: *கேட்குநு-அள்*கேட்குநு-<*கேட்குந்நு -<*கேட்குந்து <*கேட்கு+உம்+து.

5. படர்க்கை பலர்பால்: ஆடுநர் (புறம் 29·24)
   அமைப்பு: *ஆடுநு-அர். *ஆடுநு - <*ஆடுந்நு -<*ஆடுந்து <*ஆடு+உம்+து.

6. படர்க்கை பலவின் பால்: செய்குந (தொல். சொல். சேனா. 250.7)

அமைப்பு: *செய்குநு-அ *செய்குநு-<*செய்குந்நு -<*செய்குந்து<*செய்கு+உம்+து.

**புனைநர்** (<புனையுநர்), **பகர்நர்** (<பகருநர்), அரிநர் (<அரியுநர்), **வாழ்நர்** (<வாழுநர்) போன்ற சொற்களில் உம்மைக் கிளவியின் உகரம் கெட்டும் கெடாமலும் நிற்கும். இகர, ஐகார வினைப்பகுதிகளாயின் உம்மைக்கிளவியின் முன் நிகழும் யகரம் கெட்டு நிற்கும். எ-டு. புனையுநர்>*புனைய்நர்> புனைநர்; அரியுநர்>*அரிய்நர்> அரிநர்.

**பொருண்மை மயக்கம்:** பழுது என்னும் *செய்யுநு (<*செய்யுந்நு) வாய்பாட்டு வினை, சங்கப்பாடல்களில் வினையடியாக வழங்கும் நிலை காணப்படுகின்றது. வண்டுபடப் **பழுநிய**......(பத்துப்பாட்டு மதுரைக்காஞ்சி 475)

*செய்யுநு-வாய்பாட்டு வடிவங்களின் அடியாகத் தோன்றிய **மகிழ்நன், கொழுநன், பொருநன்** ஆகிய சொற்கள் வினையாலணையும் பெயர்களாக வழங்காமல் வேறு பொருண்மையை உணர்த்தும் நிலையைச் சங்கப் பாடல்களில் காணலாம்.

**கொழுநன்** (<*கொழுநு-அன்) என்ற சொல் **கொழுந்தன்** (*கொழுந்து-அன். *கொழுந்து-> *கொழுந்து-> *கொழுநு)- என்ற மூலத்தின் திரிபாகும். ஆனால் இன்று **கொழுநன்** என்னும் சொல் கணவனையும், **கொழுந்தன்** என்னும் சொல் கணவனின் தம்பியையும் உணர்த்தி நிற்கின்றன.

**வாழுநர்** என்னும் சொல் உகரக்கிளவியின் வீழ்ச்சியால் **வாழ்நர்** என அமைந்து பின்னர் **வாணர்** எனத்திரிந்து வினையாலணையும் பெயர்த்தன்மையை இழந்தது.

**தெலுங்கில் செய்யுந்து வாய்பாட்டு வினைகள்:** மலையாளத்தில் **செய்யுந்நு** வாய்பாட்டினவாகும், தமிழில் இடவிகுதிகளின் முன்னர் *செய்யுந்நு-வாய்பாட்டினவாகவும் அமைந்த **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளின் சுவடுகள் தெலுங்கிலும் காணப் படுகின்றன. நகரனகர வேற்றுமையை இழந்து தெலுங்கில் **செய்யுநு** வாய்பாட்டு வினைகள் எதிர்வுப்பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. எ-டு. **ஆடுனு** 'ஆடும்', **பாடுனு** 'பாடும்', **செப்புனு** 'சொல்லும்', **நவ்வுனு** 'சிரிக்கும்' படர்க்கைப் பலர்பால் பெயர் நீங்க ஏனைய படர்க்கைப் பெயர்கள் *செய்யுநு வாய் பாட்டு வினைகளின் எழுவாய்களாகத் தெலுங்கில் அமையும்.

**ஞுகர இடைநிலையும் செய்யுந்து வாய்பாட்டு வினைகளும்:** செய்யுந்து வினைகளில் அமைந்த-ந்த்-என்னும் இனமெய்யொலிகள்-ந்ந்- எனவும்,-ந்- எனவும் திரிந்தும், ஒடுங்கியும் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் பல்வேறு பொருண்மையினவாக அமைந்த போக்கினை மேலே கண்டோம். இ,—ஐ ஆகியவற்றை ஈற்றில் கொண்ட வினைகளின் அடியாகப் பிறந்த **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளில் உள்ள-ந்த்-என்னும் இனமெய்யொலிகள் (Homorganic Consonants), உம்மைக் கிளவியின் உகரம் கெடும் போது -ய்ந்த்- என அமைகின்றன. யகரமெய்யினை அடுத்து-ந்த்- நிகழ்வதால் அவை பின்வரும் திரிபுகளையும், ஒடுக்கத்தையும் மேற்கொள்கின்றன.

-*ய்ந்த்- > -*ய்ஞ்ச்- > -*ஞ்ச்- > -*ஞ்ஞ்- > -*ஞ்- இம்மாற்றங்களின் விளைவால் **அரிஞர்** (புறம், 348. 1), **அறிஞர்** (பத்துப்பாட்டு-மதுரைக்காஞ்சி 481), **எறிஞர்** (அகம், 71. 12), **கிளைஞர்** (புறம், 144. 10), **களைஞர்** (குறுந்தொகை, 392. 5, 397. 8), **இளைஞர்** (பத்துப்பாட்டு-மதுரைக்காஞ்சி 311), **விலைஞர்** (ஷ 405), **வலைஞர்** (ஷ 256) போன்ற சொற்கள் தமிழில் தோற்றம் கொள்ளத்தொடங்கின. இச்சொற்களின் அமைப்பைப் பின்வருமாறு புலப்படுத்தலாம்.

7. அரிஞர் (<* அரிஞு-அர். *அரிஞு-<*அரிஞ்ஞு-< *அரிஞ்சு-<*அரிய்ஞ்சு-<*அரிய்ந்து-< *அரியுந்து-< *அரிய்+உம்+து)

8. அறிஞர் (<* அறிஞு-அர். *அறிஞு-<*அறிஞ்ஞு-< *அறிஞ்சு-<*அறிய்ஞ்சு-<*அறிய்ந்து -<*அறியுந்து- <*அறிய்+உம்+து)

9. எறிஞர் (<* எறிஞு-அர். *எறிஞு-<*எறிஞ்ஞு-< *எறிஞ்சு- <*எறிய்ஞ்சு- <*எறிய்ந்து-<*எறியுந்து-< *எறிய்+உம்+து)

10. கிளைஞர் (<* கிளைஞு-அர். *கிளைஞு-<*கிளைஞ்ஞு-< *கிளைஞ்சு-<*கிளைய்ஞ்சு-< *கிளைய்ந்து-<*கிளையுந்து -<*கிளைய்+உம்+து)

11. களைஞர் (<* களைஞு-அர். *களைஞு-<*களைஞ்ஞு-< *களைஞ்சு- <*களைய்ஞ்சு- <களைய்ந்து- <*களையுந்து- <*களைய்+உம்+து)

12. இளைஞர் (<* இளைஞு-அர். *இளைஞு-<*இளைஞ்ஞு- <*இளைஞ்சு <*இளைய்ஞ்சு - <* இளைய்ந்து -<*இளையுந்து-<*இளைய்+உம்+து)

13. விலைஞர் (<* விலைஞு-அர். *விலைஞு-<*விலைஞ்ஞு-< *விலைஞ்சு - <*விலைய்ஞ்சு - <*விலைய்ந்து - <*விலையுந்து- <*விலைய்+உம்+து)

14. வலைஞர் (<* வலைஞு-அர். *வலைஞு-<*வலைஞ்ஞு-< *வலைஞ்சு- <*வலைய்ஞ்சு-<*வலைய்ந்து-<*வலையுந்து- <*வலைய்+உம்+து)

மொழியிடையில் இட விகுதிகளுக்கு முன்னர் நிகழும் நகர ஞகரங்களைப் பெயர் இடைநிலைகளாகக் கொள்வர் இலக்கணப் புலவர்கள். நிகழ் நிலை(Synchronic Level)யில் இஃது ஏற்புடையதுபோல் தோன்றினாலும் வரலாற்று நிலையில் நகர ஞகரங்கள் முறையே -ந்த்-, -ய்ந்த்- ஆகியவற்றின் திரிபுகள் என்பது மேலே நிகழ்த்திய ஆய்வுகளினின்றும் புலனாகும்.

**பேச்சுத்தமிழில் செய்யுந்து வாய்பாட்டு வினைகள் :** திராவிட மொழிகளின் வளர்ச்சியில் வல்லொலிமுன் நடைபெறும் இன மெல்லொலி வீழ்ச்சி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இவ் இனமெல்லொலி வீழ்ச்சி **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளின் **கண்ணும்** நிகழ்ந்ததாகத் துணியலாம். இதன் விளைவால் **செய்யுந்து** வாய்பாட்டு வினைகள் **செய்யுது** வாய்பாட்டினவாக ஒடுங்கி நிற்கத் தொடங்கின. பேச்சுத்தமிழில் படர்க்கை ஒருமைப் பொருண்மையை உணர்த்தும் **ஆடுது, பாடுது, இருக்குது, பறக்குது, நடக்குது, வருது** போன்ற நிகழ்கால வினைமுற்றுக்கள் **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கமாகிய **செய்யுது** வாய்பாட்டு வினைகளின்பாற்படும். இவ்வினைகளை வரலாற்று நிலையில் ***ஆடுந்து, *பாடுந்து, *இருக்குந்து, *பறக்குந்து, *நடக்குந்து, *வருந்து** என உருவமைக்கலாம்.

**பழந்தமிழில் செய்யுது வாய்பாட்டு வினைகள் :** பேச்சுத் தமிழில் பெருவாரியாக வழங்கும் **செய்யுது** வாய்பாட்டு வினைகள் சங்கப் பாடல்களில் முற்றுப்பொருண்மையை இழந்து ஒருபுறம் -அல் விகுதியை ஏற்றுச் **செய்யுதல்** வாய்பாட்டினவாகவும், இன்னொரு புறம் தன்மைப் பன்மை விகுதியாகிய -உம், முன்னிலை ஒருமை, பன்மை விகுதிகளாகிய -இ, -இர் ஆகியவற்றை ஏற்று முறையே **செய்யுதும், செய்யுதி, செய்யுதிர்** வாய்பாட்டினவாகவும் நடைபெறுகின்றன. **ஆடுதல், சொல்லுதல், வருதல், புகழ்தல், படர்தல்** செய்யுது வாய்பாட்டு வினைகளின் மீது அமைந்த செய்யுதல்/செய்தல் வாய்பாட்டு வடிவங்களாகும். இவை பழந் தமிழில் ஏவல் கண்ணிய வியங்கோள் வினைகளாகவும், தொழிற்

பெயர்களாகவும் நடைபெறுகின்றன. [1]**வைகுதும்** (புறம், 17. 29), **சாற்றுதும்** (ஷை 104. 1), **விளங்குதி** (ஷை 8. 10), **அஞ்சுதி** (கலித்தொகை 107. 26); **ஆற்றுதிர்** (புறம், 58. 20), **வினவுதிர்** (ஷை 191. 2) ஆகியவை முறையே **செய்யுதும், செய்யுதி, செய்யுதிர்** ஆகிய வாய்பாட்டின்கண் அமைந்து முற்றுப்பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. நிகழ்வு அல்லது நிகழ்வெதிர்வுப் பொருண்மையைக் குறிக்கும் இவ்வினைமுற்றுக்கள் பின்வரும் அமைப்பினவாகும்.

15. வைகுதும் (< * வைகுது - உம். * வைகுது - < * வைகுந்து - < * வைகு+உம்+து)

16. சாற்றுதும் (< * சாற்றுது - உம். * சாற்றுது - < * சாற்றுந்து - < * சாற்று+உம்+து)

17. விளங்குதி ( < * விளங்குது - இ. * விளங்குது - < * விளங்குந்து - < *விளங்கு+உம்+து)

18. அஞ்சுதி (< * அஞ்சுது - இ. * அஞ்சுது - < *அஞ்சுந்து - < * அஞ்சு+உம்+து)

19. ஆற்றுதிர் (< * ஆற்றுது - இர். * ஆற்றுது - < * ஆற்றுந்து - < * ஆற்று+உம்+து

20. வினவுதிர் (< * வினவுது-இர். * வினவுது - <* ) வினவுந்து-<* வினவு+உம்+து)

உகர ஈற்று வினையடிகள் நீங்க ஏனைய வினைகளின் மீது அமைந்து தன்மை, முன்னிலை விகுதிகளை ஏற்கும் செய்யுது வாய்பாட்டு வினைகள் உம்மைக்கிளவியின் கூருகிய உகரத்தை இழந்து செய்து வாய்பாட்டினவாகவும் அமையும் நிலை சங்கப் பாடல்களில் பெருவாரியாகக் காணப்படுகின்றது. **வாழ்தும்** (புறம், 163. 6), **படர்தும்** (ஷை 399. 13), **கலுழ்தி** (கலி, 91. 19), **சேர்தி** (ஷை 142. 37), **விரைதி** (புறம், 304. 4), **உண்டி** (கலி, 85. 25), **என்றி** (ஷை 122. 6), **அறிதிர்** (ஷை 147. 26), **காண்டிர்** (புறம், 287. 4) ஆகிய வினைகள் முறையே **வாழுதும், படருதும், கலுழுதி, சேருதி, விரையுதி,** உண்ணுதி (>* உண்தி>உண்டி), **என்னுதி** (>* என்தி>என்றி), **அறியுதிர்,** காணுதிர் (>*காண்திர்> காண்டிர்) ஆகியவற்றின் ஒடுக்கங்களாகும்.

---

*1. முற்றெச்சங்கள் (பக்கம் 13-14). இரா, கோதண்டராமன். செந்தமிழ் தொகுதி 66. பகுதி 3,*

இக்கட்டுரையை மேலும் தொடருவதற்கு முன் இடைப்பிறவரலாகப் பின்வரும் செய்தியைக் குறிப்பிடலாம். இவ் விடைப்பிறவரலிற் காணும் செய்திகள் மேலும் ஆய்வுக் குரியவையாகும்.

மேற்குறிப்பிட்ட செய்யுதும், செய்யுதி, செய்யுதிர் வாய்பாட்டு வினைமுற்றுக்களே யன்றி **இறத்தி** (புறம், 8. 7), **ஒளித்தி** (ஷை 8. 8), **அளித்தி** (கலி, 95. 31), **பூத்தி** (புறம், 242. 6), கேட்டி (ஷை 289. 8) போன்ற முன்னிலை ஒருமை வினைமுற்றுக்களும், **கடத்திர்** (கலி, 7. 3) போன்ற முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. இவ் வினைகளும் நிகழ்வு அல்லது நிகழ்வெதிர்வுப் பொருண்மையை உணர்த்துவனவே யாகும். ஆயினும், இவற்றைச் செய்யுந்து வாய்பாட்டின் திரிபாகிய செய்யுது வாய்பாட்டு வினைகளின் மீது அமைந்தனவாகக் கொள்வதற்கில்லை.

* செய்-உத்து என்ற வாய்பாட்டின்கண் இவ்வினைகளை அடக்கலாம் என்று தோன்றுகின்றது.[1] * செய்-உத்து வாய் பாட்டு வினைகள் கன்னடத்தில் நிகழ்கால வினையெச்சங்களாக நடைபெறுகின்றன. **செய்யுது** வாய்பாட்டு வினைகள் **செய்து** வாய்பாட்டினவாக ஒடுங்கியதைப்போலவே * **செய்-உத்து** வாய் பாட்டு வினைகளும் * **செய்-த்து** வாய்பாட்டினவாக ஒடுங்கி, பழந் தமிழில் இடவிகுதிகளை ஏற்கத் தொடங்கினவாகக் கருதலாம். இதனைப் பின்புலமாகக் கொண்டு மேற்குறித்த வினைமுற்றுக் களின் அமைப்பினைப் பின்வருமாறு ஆராயலாம்.

21. இறத்தி (<* இறத்து-இ. * இறத்து-<* இறய்த்து-<* இறயுத்து-<* இறய்-உத்து)

22. ஒளித்தி (<* ஒளித்து-இ. * ஒளித்து-<* ஒளிய்த்து-<* ஒளியுத்து<* ஒளிய்-உத்து)

23. அளித்தி(<* அளித்து-இ. * அளித்து-<* அளிய்த்து -<* அளியுத்து-<* அளிய்-உத்து)

24. பூத்தி (<* பூத்து-இ. * பூத்து-<* பூய்த்து-< * பூயுத்து<* பூய்-உத்து)

---

*1.* **பத்து, ஈத்து, நீத்து, பூத்து, நத்து** ஆகியவை முறையே *பய்-து, *ஈய்-து, *நீய்-து, *பூய்-து, *நய்-து என்ற வரலாற்று அமைப்பின வாகும். இதேபோல் ***செய்-உத்து** வாய்பாட்டு வினையில் நிகழும் **-உத்து** என்னும் கிளவியை *உய்-து என்ற அமைப்பினதாகக் கருதலாம்.

25. கேட்டி (<* கேட்டு-இ. *கேட்டு-< * கேள்த்து<* கேளுத்து-<* கேள்-உத்து)

26. கடத்திர் (<* கடத்து-இர். *கடத்து-<* கடய்த்து-<* கடயுத்து-<* கடய்-உத்து)

* செய்-உத்து வாய்பாட்டு வினைகள் கன்னடத்தில் இட விகுதிகளை ஏற்று நிகழ்கால வினைமுற்றுக்களாகின்றன. இந் நிலை தெலுங்கு வினைமுற்றுக்களிலும் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக **ஆடுது(னு)** 'ஆடுவேன்', **பாடுதுமு** 'பாடுவோம்', **செப்புதுவு** 'சொல்வாய்', **நவ்வுதுரு** 'சிரிப்பீர்கள்/சிரிப்பார்கள்' போன்ற தெலுங்கு வினைமுற்றுக்களை * **செய்-உத்து** வாய்பாட்டு வினைகளின்மீது அமைந்தனவாகக் கொண்டு அவற்றைப் பின்வருமாறு ஆராயலாம்.

27. ஆடுது(னு) (< * ஆடுது-(னு). * ஆடுது - < * ஆடுத்து-<* ஆடு-உத்து)

28. பாடுதுமு (<* பாடுது-மு. *பாடுது-<* பாடுத்து-< * பாடு-உத்து)

29. செப்புதுவு (<* செப்புது-வு. * செப்புது-<* செப்புத்து-<* செப்பு-உத்து)

30. நவ்வுதுரு(<* நவ்வுது-ரு. *நவ்வுது-<* நவ்வுத்து-<* நவ்வு-உத்து)

* **செய்-உத்து** வாய்பாட்டு வினைகள் * **செய்-த்து** என அமைந்து பின்னர் * **செய்-து** என ஒடுங்கிய நிலையை மேற் குறித்த தெலுங்கு வினைமுற்றுக்களில் காணலாம். **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளினின்றும் தோன்றிய **செய்யுது** வாய்பாட்டு வினைகளும் **செய்து** வாய்பாட்டினவாக ஒடுங்கும் நிலையை முன்னர்க் குறிப்பிட்டோம். இதேபோல் * **செய்-உத்து** வாய்பாட்டு வினைகளும் * செய்-து வாய்பாட்டினவாகத் தெலுங்கில் ஒடுங்கும் நிலையைக் காண்கிறோம். **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளினின்றும் ஒடுங்கியமைந்த **செய்து** வாய்பாட்டு வினைகளிலும், * செய்-உத்து வாய்பாட்டு வினைகளினின்றும் ஒடுங்கியமைந்த **செய்-து** வாய்பாட்டு வினைகளிலும் ஈற்றில் நிகழும் உகரம் ஊர்ந்த தகரங்கள் முறையே அலையொலி (Voiced Sounds) யினவாகவும், நிலையொலி (Voiceless Sounds) யின வாகவும் ஒலிக்கப்பெறும்.

இனி மீண்டும் செய்யுது (<செய்யுந்து) வாய்பாட்டு வினைகளின்மீது அமைந்த வேறுசில வினைமுற்றுக்களைக் காண்போம். சங்க இலக்கியங்களில் தன்மைப்பன்மைப் பொருண்மையை உணர்த்தும் **சேறும்** (பத்துப்பாட்டு 2. 121) 'செல்வோம்', முன்னிலை ஒருமைப் பொருண்மையை உணர்த்தும் **சேறி** (நற்றிணை 126. 11) 'செல்வாய்', **முயறி** (கலி, 17. 10) 'முயல்வாய்', முன்னிலைப் பன்மைப்பொருண்மையை உணர்த்தும் **அகறிர்** (நற்றிணை, 37. 7), 'அகல்வீர்' **சேறிர்** (பத்துப்பாட்டு, 10. 65) 'செல்வீர்' முதலிய வினைமுற்றுக்கள் வழங்கும் நிலை காணப்படுகின்றன. இவ் வினைகள் பின்வரும் அமைப்பின வாகும்.

31. சேறும்
32. சேறி
33. சேறிர்

} ( <* சேறு-உம்/இ(ர்). * சேறு- <* சேன்று- <* சேல்ந்து- <* சேலுந்து- <* சேல்+உம்+து)

34. முயறி ( <* முயறு-இ. * முயறு- <* முயன்று- < * முயல்ந்து- <* முயலுந்து- <* முயல்+உம்+து)

35. அகறிர் ( <*அகறு-இர். *அகறு— <*அகன்று- <*அகல்ந்து - <*அகலுந்து - <* அகல் + உம் +து)

செய்யுதல்/செய்தல் வாய்பாட்டினதாகிய **கோறல்** 'கொல்லுதல்' என்னும் சொல்லையும் இவ்வாறே ஆராயலாம்.

36. கோறல் ( <* கோறு-அல். * கோறு- <* கோன்று- < * கோல்ந்து- < * கோலுந்து - < * கோல் + உம்+து)

**நெல்லைத் தமிழில் செய்யுந்து வாய்பாட்டுவினைகள் : செய்யுந்து** வாய்பாட்டு வினைகளினின்றும் தோன்றிய செய்யுது வாய்பாட்டு வினைகள் இடவிகுதிகளை ஏற்று நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தும் நிலை நெல்லை மாவட்டத்துப் பிள்ளைமார் பேச்சுத் தமிழில் காணப்படுகின்றது. எ-டு: **இருக்குதேன்** 'இருக்கிறேன்', **பாடுதோம்** 'பாடுகின்றோம்', **நடக்குதான்** 'நடக்கின்றான்', **சொல்லுதாள்** 'சொல்கின்றாள்'. இவற்றின் அமைப்பைப் பின்வருமாறு ஆராயலாம்.

37. இருக்குதேன் ( <* இருக்குது-ஏன், * இருக்குது- <* இருக்குந்து- <* இருக்கு+உம்+து.)

38. பாடுதோம் ( <* பாடுது-ஓம். *பாடுது- > *பாடுந்து- <* பாடு+உம்+து)

39. நடக்குதான் (<*நடக்குது - ஆன். *நடக்குது - <*நடக்குந்து <*நடக்கு+உம்+து)

40. சொல்லுதாள் (<*சொல்லுது-ஆள். *சொல்லுது <*சொல்லுந்து <*சொல்லு+உம்+து)

**பிற திராவிடமொழிகளில் செய்யுந்து வாய்பாட்டு வினைகள்:** **செய்யுந்து** வாய்பாட்டின் ஒடுக்கமாகிய **செய்யுது** வாய்பாட்டு வினைகளின் சுவடுகள் பிற திராவிட மொழிகளிலும் அங்கங்கே காணப்படுகின்றன.

கன்னடத்தில் ஆகு, இரு ஆகிய இருவினைகளுக்கும் நிகரான வினைகள் **செய்யுது** வாய்பாட்டினவாகிப் பின்னர் இட விகுதிகளை ஏற்று நிகழ்வுப் பொருண்மையை உணர்த்து கின்றன.[1]

41. அ(ய்)தேனெ 'ஆகின்றேன்' (<*அ(ய்)து-ஏனெ. *அ(ய்து) - <*அய்ந்து- <*அயுந்து- <* அய் + உம் +து)

42. இத்தேனெ (idde : ine) 'இருக்கிறேன்'. (<*இத்து (iden)-ஏனெ. *இத்து-(iddu)- <*இர்து-(irdu) <* இர்ந்து-(irndu) <*இருந்து- <*இர்+உம்+து)

கௌடகன்னடத்தில் சில குறிப்பிட்ட வினைகளின் அடியாகத் தோன்றிய செய்யுது வாய்பாட்டு வினைகள் படர்க்கை ஒருமையில் நிகழ்ந்து எதிர்வுப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன.[2]

43. கொடுது 'கொடுக்கும்' (<*கொடுந்து <*கொடு+ உம்+து)

44. கேளுது 'கேட்கும்' (<*கேளுந்து <* கேள் + உம் +து)

செய்யுது வாய்பாட்டு வினைகள் தெலுங்கில் தன்மை, முன்னிலை, படர்க்கை பலர்பால் ஆகிய விகுதிகளை ஏற்று வழமைப் பொருண்மை (Habitual Tense) யைக் குறித்து நிற்கின்றன.[3]

---

1. Dravidian Verb Morphology. pp. 256. P. S. Subrahmanyam. Annamalai University 1971.

2. Gowda Kannada. pp. 92. K. Kushalappa Gowda. Annamalai University 1970.

3. Dravidian Verb Morphology. pp. 265. P. S. Subrahmanyam. Annamalai Uuiversity 1971.

45. வண்டுது—னு 'சமைப்பேன்'
வண்டுது—மு 'சமைப்போம்'
வண்டுது—வு 'சமைப்பாய்'
வண்டுது—ரு 'சமைப்பீர்கள்/சமைப்பார்கள்'
*வண்டுது- <*வண்டுந்து <*வண்டு+உம்+து.
வண்டு 'சமை'.

மத்திய திராவிடமொழிப் பிரிவைச் சேர்ந்த கூய் மொழியில் எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் முன்னிலை வினைகளைச் **செய்யுது** வாய்பாட்டின் மீது அமைந்தனவாகக் கருதலாம்.

46. கோதி 'கொய்வாய்'
கோதெரு 'கொய்வீர்'
*கோது - இ / எரு. *கோது - <*கோந்து - <*
கோய்ந்து- <*கோயுந்து- <*கோய்+உம்+து)

**செய்யுந்து வாய்பாட்டு வினைகளும் சங்க இலக்கியங்களும் :** புறநானூற்றில் காணப்படும் செய்யுந்து வாய்பாட்டு வினைகள் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் வழக்கற்றுப் போயினவாதல் வேண்டும். **செய்யுந்து** வாய்பாட்டின் மீது தோன்றிய **செய்யுநன், செய்யுநள், செய்யுநர், செய்யுந** ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களும், **கிளைஞர், அறிஞர்** போன்ற சொல்லாட்சிகளும், **செய்யுதும், செய்யுதி, செய்யுதிர்** ஆகிய வாய்பாட்டு வினைமுற்றுக்களும் நாம் பெற்றுள்ள பழந்தமிழ் இலக்கியங்களில் பெருவாரியாகக் காணப் படுவதால் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்பே **செய்யுந்து** வாய்பாட்டு வினைகள் பயின்று வழங்கியிருக்க வேண்டும். வழக்கற்றுப்போன பழந் தமிழ்ச் சொற்களைத் தற்காலக் கவிஞர் சிலர் தம் கவிதைகளில் புகுத்துவதைப் போலவே, தம் காலத்தில் வழக்கற்றுப்போன செய்யுந்து வாய்பாட்டு வினைகளைப் புறநானூற்றுக் கவிஞர்கள் சிலர் தாம் இயற்றிய பாடல்கள் சிலவற்றுள் புகுத்தினர் எனக் கருதலாம். இது மேலும் ஆய்வுக்குரியதாகும்.


**முடிபு :** தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய தென் திராவிட மொழிகளிலும், தெலுங்கு, கூய் ஆகிய மத்திய திராவிட மொழிகளிலும் **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளின் சுவடுகள் பல்வேறு வடிவங்களில் காணப்படுவதால், இவ்வாய் பாட்டு வினைகள் தென்திராவிட மொழிகளும், மத்திய திராவிட மொழிகளும் தோற்றம் கொள்வதற்கு முன்பே அவற்றின் மூல மொழியில் பயின்று வழங்கினவாகக் கருதலாம்.

# ஒய். எம். சி. ஏ. பட்டிமன்ற
# 27ஆம் ஆண்டுவிழா




தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள்
விழாத் தொடக்கவுரை ஆற்றுதல்.
உடனிருப்போர் : பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரையார்,
மன்றத் தலைவர் திரு. மா. சண்முகசுப்பிரமணியம்.

# மறைமலையடிகளார் 21 ஆம் நினைவு விழா
# (30-11-1972)



திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்



டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமையுரை ஆற்றுதல்

# மறைமலையடிகள் 21ஆம் நினைவு விழா

தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலையடிகளாரின் 21ஆம் ஆண்டு நினைவு விழாவும் பன்னாட்டுப் புத்தக ஆண்டு (1972) விழாவும் 30-11-'72இல், அடிகளார் நூலகத்தில் அமைந்துள்ள வள்ளலார் திருவருள் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. விழாவை யொட்டிப் புத்தகக் காட்சியொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆட்சித் தலைவர் **டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், எம்.ஏ., பி.எச்டி.,** அவர்கள் தலைமை தாங்கினர். நிகழ்ச்சிகளின் சுருக்கம் வருமாறு :

**வரவேற்புரை :**

வரவேற்புரை நிகழ்த்திய கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

இந்த விழாவிற்குத் தலைமை தாங்கப் போந்துள்ள பேரன்பர் டாக்டர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆட்சித் தலைவராவார். எனவே, அவர்கள் வழியாகத்தான் உலகமெல்லாம் தமிழ் பரவுதற்கு வழிகாண வேண்டும். மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்களும், பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் க. ப. அறவாணன் அவர்களும் அடிகளாரின் பணிகளைப் பாராட்டி உரை நிகழ்த்த விருக்கின்றனர். நூலகம் பற்றிச் சிறப்புரையாற்றச் சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. மோகன்ராசு அவர்கள் வந்துள்ளனர்.

இந்த 1972 ஆம் ஆண்டை அனைத்து நாட்டுப் புத்தக ஆண்டாக எங்கும் கொண்டாடுகிருர்கள். இது நூலகமாக இருப்பதால் புத்தகக் காட்சியினையும் இங்கு அமைத்திருக்கிறோம். நூலகம் பற்றி 1914 ஆம் ஆண்டில் அடிகளார் நாட்குறிப்பில் எழுதிவைத்திருந்ததை நூலகர் இங்கு அச்சிட்டு வழங்கியுள்ளனர். அடிகளார் தமது இறுதிக்காலம் வரை நூல்களைப் படித்துக்கொண்டும் வாங்கிக் கொண்டுமிருந்தார்கள். அவர்கள் வாங்கிய புத்தகங்கள் ஏறத்தாழ 4,000 இருக்கும். அவ்வளவும் பயனுள்ளவை ; அவர்கள் பயன்படுத்தியவை. அவ்வாறு கற்பவர்களை இக்காலத்தில் காணமுடியவில்லையே என்று கவலைப் படுகிறேன். கற்பவர்களுக்காகத்தான் நாங்கள் நூல்களைப் பதிப்பிக்கிறோம். கற்பவர்கள் இல்லையென்றல் நூல்களைப் பதிப்பிக்க இயலாது. 2,000 ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்ட

நூல்கள் அச்சிட்டு வெளிவராதிருக்குமானால் இன்று இந்த நாடு நாடாக இருக்குமா என்பதை அறிவுடையோர் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். திருக்குறள் கருத்துக்கள் நன்கு பரவ வேண்டும் என்பதற்காகத் திருக்குறளைப் பல வடிவங்களில் கழகம் பதிப்பித்து வருகின்றது. அந்த எண்ணம் நிறைவேற வில்லையென்றால் வருத்தமாக இருக்கின்றது.

அடிகளார் ஆயிரக்கணக்கான நூல்களைப் பயின்று நமக்கு அரிய செல்வத்தைத் தந்துள்ளார்கள். அத்தகையவர்க்கு நாம் என்ன நன்றி செய்கிறோம்? கற்றவர்கள் இந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்துவது மிக அரிதாகவே யிருக்கிறது. பல்லாவரத்திலுள்ள மறைமலையடிகள் கலைமன்றத்திலும் மக்கள் பலர் வந்து படிப்பதில்லை. அறிவுத்துறையில் பணியாற்றுபவர் களெல்லாம் நமக்குத் தெய்வம்தான். நம் நாட்டில் நூல்களைத் தொகுத்து வைப்பவர்களைக் காண முடியவில்லை. முன்னோர் நூல்களை நாம் தொகுத்து வைத்திராவிட்டால் பழமொழி அகரவரிசை, நிகண்டுகள் போன்ற நூல்களை எங்கே காண முடியும்?

மாணவர்களைத் திருத்த நாம் ஒரு திட்டம் வகுக்க வேண்டும். அதனை ஆட்சியிலுள்ளவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் யார் முற்பட்டுச் செய்வது என்பதுதான் இன்றுள்ள நிலை. என்போன்றவர்களின் சொல் அம்பலம் ஏறுவதில்லை.

இந்தக் கழகம் வளர்ந்திருக்கிறது என்றால், அது நூற்றுவரில் ஒருவரால்தான் வளர்ந்திருக்கிறது. இதுவே மூவர்-ஐவர் என்றிருந்தால் எவ்வளவோ செய்திருக்கலாம். அறிவுத் துறைக்கு நம் நாட்டில் மதிப்பில்லை. அப்படி யிருக்கும்போது எப்படி நாம் அறிவுடைய மக்களைப் பெறமுடியும்?

எனவே, இவற்றையெல்லாம் அறிஞர்கள் சிந்தித்துச் செயலாற்றவேண்டு மென்றுகூறி இந்த விழாவைச் சிறப்பிக்க வருகைதந்துள்ள பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன். இனி இந்த விழாவைச் சிறப்புற நடத்தித் தருமாறு மதிப்பிற்குரிய டாக்டர் மீனாட்சிசுந்தரம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**தலைமையுரை :** டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம், எம்.ஏ., பி.எச்.டி.,

தமிழறிஞர்களைப் பற்றி நினைக்கின்ற இடத்திற்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தாலும் இந்த நூலகத்தை ஒரு

காலத்தில் பயன்படுத்தியவன் என்ற காரணத்தாலும் இந்த நூலகரோடு தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தாலும் அழைப்பிற்கு இணங்கி இப் பணியினை மேற்கொள்கிறேன்.

மறைமலை அடிகளாரைப்பற்றி உங்களுக்கு நான் அதிகம் கூறத் தேவையில்லை. நீங்கள் எல்லாம் கற்றவர்கள். உங்களில் சிலர் அவருடன் கூடியிருந்து அவரை அறிந்தவர்களாகவும் இருப்பீர்கள். அத்தகைய பேரறிஞரைப் பற்றி நினைப்பதன் மூலம் அவர் நினைத்த நினைப்புகள், செய்த தொண்டுகள் ஆகிய வற்றை நாமும் புதுப்பித்துக் கொள்ள முடியுமா? ஏதாவது உணர்ந்து கொள்ள முடியுமா என்று நினைக்கும் அளவிற்குத் தான் செயல்பட முடியும். அவர் ஓர் ஒழுங்கான கட்டுப்பாடான வாழ்க்கையை மேற்கொண்டவர். கொஞ்சம் நுணுக்கமாக எண்ணுபவர்க ளெல்லாம் சாதாரண மனிதர்களைப் போல் இருப் பதில்லை என்பது வரலாறு கூறும் உண்மை. அவர் காலச் சூழ்நிலை வேறு; இப்போதுள்ள சூழ்நிலை வேறு. இன்று நாம் தமிழை வளர்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோமே தவிரக் காக்க வேண்டிய சூழ்நிலையில் இல்லை. அடிகள் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் புலமை வாய்ந்து எழுதும்போது அதனதன் நிலையில் நின்று எழுதியிருக்கிறார்கள். மறைமலையடிகள் பெயரில் நூல்கள் இங்கே தொகுத்து வைக்கப்பட்டிருப்பதைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஆட்சியாளர் மாணவர் நிலைபற்றிக் குறிப்பிட் டார்கள். அதற்கெல்லாம் அடிப்படையாக மாணவர் மனநிலையை நாம் அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும். மாணவர்கள் தமிழில் விருப்பங் காட்டாமல் தம்முடைய தேவையை நாடிப் போய் விடுகின்றனர். எனவே, எதற்கும் ‘விருப்பம்’ என்ற நிலை ஏற்பட வேண்டும்.

மறைமலையடிகள் கல்லூரி ஆசிரியராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்கள். அவருடைய அஞ்சாமை, துணிவு ஆகியன போற்றப்படல் வேண்டும். அவர் முரட்டுப் பிடிவாதமுடையவர். ஆனால், கருத்துப் பரிமாற்றம் தேவை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதனால் மன வேறுபாடு கொள்ளத் தேவையில்லை.

**அடிகளார் பணி பாராட்டல் :**

அடிகளாரின் பணிகளைப் பாராட்டு முகத்தான், மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் **டாக்டர் மெ. சுந்தரம் எம். ஏ., பிஎச். டி.** அவர்கள் பேசுகையில்,

இருபதாம் நூற்றுண்டின் எழுஞாயிருகவும், கருத்துக் கலங்கரை விளக்கமாகவும், ஆராய்ச்சி மணியாகவும் விளங்கிய மூதறிஞர் அடிகளாவர். மேனுட்டார் வழிநின்று இலக்கிய ஆராய்ச்சி செய்தவர் அடிகள். அவருடைய மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சியின் முடிவிலே கருத்து வேறுபாடிருப்பினும் அந்நூல் பல வரலாற்று உண்மைகளை விளக்குவதாகவுள்ளது. முல்லைப்பாட்டாராய்ச்சி வளமான சுவையுடையதொன்ருகும். அடிகளார் 7 ஆவது நூற்றுண்டில் வாழ்ந்திருந்தால் அவரை அவதாரம் என்று கூறியிருப்பார்கள். வேதம் தமிழ்ச்சொல் என்று நிலைநாட்டியவரும், நச்சினுர்க்கினியரின் மாட்டேற்றிலக் கணத்தை முதன்முதல் மறுத்தெழுதிய பெருமகனுரும் அடிகளாரேயாவர். முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் என்னும் அவரது நூலில் கம்பன் பட்டபாடு ஆராயத்தக்கது. மேல்நாட்டார் தமிழைப் பாராட்டப் பயன்பட்டது அவர் எழுதிய ஆங்கில முன்னுரைகளே. 1938இல் இந்தி பொது மொழியா? என்ற நூலை இலக்கண இலக்கிய அடிப்படையிலும் காரணம் காட்டியும் எழுதியிருக்கிருர்கள். மொழிப் பணியும் சமயப் பணியும் செய்த அவர்கள் பெறவேண்டிய சிறப்பைப் பெருமல் போய்விட்டார்கள். மறைமலையடிகளைத் தமிழ்த் தெய்வம் என்று ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் தமிழாசிரியர்கள்.

**பேராசிரியர் க. ப. அறவாணன் :**

பச்சையப்பன் கல்லூரிப் **பேராசிரியர் க. ப. அறவாணன்,** எம். ஏ., பி. ஒ. எல். அவர்கள் உரைச் சுருக்கம் வருமாறு :

தனித்தமிழ் உணர்ச்சி - தமிழ் இன உணர்ச்சி - சமய உணர்ச்சி இல்லாத காலத்தில் அவற்றை உணர்த்த ஒரு சத்தி தேவைப்பட்டது. அந்த ஒரு தனிச் சத்திதான் மறைமலை யடிகள். தமிழ்மொழி - தமிழ் இனம் - தமிழ் மதம் ஆகியவை தனித்தன்மை வாய்ந்தவை என்று காட்ட முனைந்தார் அடிகள். அந்த முனைப்பின் விளைவுதான் அவர்தம் நூல்கள். அவர் தொடங்கி வைத்த மொழிப்பணி - சமயப்பணி - இனப்பணி ஆகியவைதாம் பிற்காலத்தில் நீதிக் கட்சியாகவும், திராவிடர் கழகமாகவும் தனித்தமிழ் இயக்கமாகவும் உருவெடுத்தன. இப்போது நாம் அவரது தனித்தமிழ் இயக்கக் காலத்தில் வாழ் கிருேம். அவர் வழிநின்று தேவநேயப் பாவாணர் போன்ற வர்கள் எழுத்துப்பணி ஆற்றிவருகிருர்கள். தனித்தமிழ் இயக்கப் பணி ஓர் அரசியல் இயக்கமாகக் காணப்படுகிறது. அடிகள் ஆற்றிய தனித்தமிழ் இதழ்ப் பணியினைச் சிறப்பாகச் ‘செந்தமிழ்ச் செல்வி’, ‘தென்மொழி’, ‘தமிழம்’, ‘தமிழ்ப்பணி’

போன்ற சில இதழ்கள் ஆற்றிவருகின்றன. அடிகளாரின் புகழ் தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய அளவு கல்லிலே பொறிக்கப்பட்டதாகும்.

**பேராசிரியர் அ. மோகனராசு :**

சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. **அ. மோகனராசு** அவர்கள் பேசுகையில், மறைமலையடிகளார் நூல்நிலையப் பணியினைப் பாராட்டிப் போற்றியதோடு உலகின் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு, உடை, இடம் ஆகிய தேவைகள் பெருகியிருப்பது பற்றியும், அதனை நிறைவு செய்ய மேற்கொள்ளும் முயற்சிகளுள் கல்வி ஒன்று எனவும், அந்தக் கல்வியும் தானே கற்கும் கல்வியாகும் என்றும் அதற்குரிய இடங்கள் நூலகங்களே என்றும் கூறினார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் (UNESCO) நிபுணர் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் நூல்களைப் பதிப்பித்து வருகிறார்கள் என்று கூறிப் பாராட்டினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், மறைமலையடிகளார் நூலகத்தின் நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப். அவர்கள் நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது.

---

## பன்னாட்டுப் புத்தக ஆண்டு (1972) விழா
## புத்தகக் காட்சி

*உலகமனைத்தும் 1972ஆம் ஆண்டைப் புத்தக ஆண்டாகக் கொண்டாடுகிறது. அதையொட்டிச் சென்னை, மறைமலையடிகள் நூல்நிலையத்தில் புத்தகக் காட்சி திசம்பர் 1, 2, 3 ஆகிய மூன்று நாள்களிலும் அமைக்கப் பெற்றிருந்தது. அதில் 1872க்கு முன் வெளியான தமிழ், தமிழ் பற்றிய ஆங்கில நூல்கள், பன்னிரு திருமுறை, அருட்பா பதிப்புக்கள், பா. வே. மாணிக்கநாயகர், மறைமலையடிகள், வ. உ. சிதம்பரனார் ஆகியோர் நூல்கள், கழகத்தின் 1460 வெளியீடுகள், தமிழ்ப்பாட நூல் வெளியீட்டுக் கழக நூல்கள், விழா மலர்கள், கருத்து விளக்க அட்டைகள், இந்தி எதிர்ப்பு இயக்கக் கடிதக் கோப்புகள் முதலியவை காட்சியாக இடம் பெற்றிருந்தன.*

*காட்சியை நூற்றுக் கணக்கான அன்பர்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர். பார்வையாளர்கள் பொறித்துவைத்த கருத்துரைகளிலிருந்து சில பகுதிகள் மட்டும் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.*

**டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., பிஎச்டி,**
*மாநிலக்கல்லூரி, சென்னை.*

மறைமலையடிகளின் நூற்கருத்துக்கள் தமிழ்கூறு நல்லுலகம் பரவிப் பயன்பெரிது நல்கவேண்டும். அதற்கு இதுபோன்ற விழாக்கள் உறுதுணை புரியும் என்பது ஒருதலை.

**தண்டை சு. இலம்போதரன்,**
*சென்னை-81.*

இன்று நான் கண்டது வெறும் கண்காட்சி அல்ல. கருத்துக்கு விருந்தூட்டும் நிதியம். பெரியார் வ. சுப்பையா பிள்ளையின் அயரா முயற்சியின் பிரதிபலிப்பு இது.

**திரு க. சி. கமலையா,**
*தி. நகர், சென்னை-17.*

பார்த்துப் பயன்பெற வேண்டிய கண்காட்சி. ஒருநாள் மட்டும் பார்த்தால் போதாது. பலநாள்கள் பார்க்கத் தகுந்த நூல்களின் சேர்க்கை. தமிழின் பல துறைகளையும் தொட்டுச் செல்கிறது இக் கண் காட்சி.

**திரு ஏ. கே. செட்டியார்,**
*மெரிமலர், சென்னை.*

1872ஆம் ஆண்டுக்கு முன் வெளியான நூல்கள் ஓர் அரும் புதையல். நூலகத்தார் அதனைக் கண்ணிமை காப்பது போன்று காப்பாற்று கின்றனர். இதன் அருமை பெருமையைத் தமிழர் நன்கு உணரும் நாள் எந்நாளோ?

**திரு ஊ. ஜயராமன்,**
*எழுத்தாளர், சென்னை-1.*

அற்புதமான நூற்காட்சி; சைவசித்தாந்தக் கழகம் தவிர வேறெவரும் நடத்த முடியாது. தமிழின் கடந்த, இன்றைய, எதிர் காலத்தை நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டுவது. தமிழின் அடித் தளத்தையும் நடுமரத்தையும் வானவரம்பையும் புலப்படுத்துவது.

**சுவாமி சாயிரமணாநந்த பாபாஜி,**
*சாயிபாபாமந்திர், சென்னை-49.*

பல இடத்து வைரவிழா, ஆண்டுவிழா, வெள்ளிவிழா போன்ற மலர்களைப் பார்க்கும் சமயம் எப்பேர்ப்பட்ட மனிதனுக்கும் தன்னை அறியாது ஒரு பக்தி உண்டாக்கும் நிலையிலே தங்கள் நூல்நிலையத்தில் இருப்பதைக் காண மிக்க மகிழ்ச்சி.

# செய்திகளும் குறிப்புகளும்

## உலகெங்கணுமுள்ள தமிழ் மக்கட்கு அறிவிப்பு

தென்மாவாரியில் மூழ்கிப்போன குமரிக்கண்டத் தென்கோடியில் தோன்றின முன்னைத் தமிழரை, நண்ணிலக் கடற்கரை நாடுகளினின்று வந்தேறிகள் என்று, தமிழ்ப்பகைவரான ஆரியரும் அவரடியாரான வையாபுரிகளும் கோட்பாடாகக் கூறிவருவதால், நடுநிலையுள்ள மேலையறிஞரும், தமிழின் பெருமை முற்றும் மறையுமாறும் தமிழரின் முன்னேற்றம் என்றும் தடையுண்ணுமாறும், வரலாற்றிற்கு மாருகத் தலைகீழான முடிவு கொண்டுள்ளனர்.

இந்நிலைமையை அறவே நீக்கித் தமிழ் மீண்டும் அதன் அரியணையி லமரவும், தமிழன் தன் உரிமையை மீட்கவும், அடிகோலுமுகமாக, வருகின்ற 31—12—72 ஞாயிறு, தஞ்சையில், உலகத் தமிழ்க் கழகச் சார்பில் ஒரு கருத்தரங்கு நடைபெறும். பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையும் பாவாணரும் பிறரும், தமிழன் பிறந்தகம் குமரிநாடே என்று தக்க சான்று காட்டி நிறுவுவர். பேரா (K. A.) நீலகண்ட சாத்திரியும் பர். (S. K ) சட்டர்சியும் வையாபுரிகளும் வந்து அதை மறுத்தல் வேண்டும். தவத்திருக் குன்றக்குடி அடிகள், அழகரடிகள், காஞ்சி ஞானப்பிரகாச அடிகள், பர். வ. சுப. மாணிக்கம், பேரா. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புதுப்புனைவர் கோ. து. நாயக்கர் (G. D. நாயுடு), பெரும்புலவர் நீ கந்தசாமிப்பிள்ளை முதலியோரைக் கொண்ட நடுவர் குழு, அறுதியும் இறுதியும் உறுதியு மான தீர்ப்புக் கூறும். அத்தீர்ப்பே இனி உலகுள்ள அளவும் நிலைத்து நிற்கும்.

இறைக்குருவன்,

உ. த. க. செயலாளர், மதுரை.

## நிலத்துள் மறைந்து கிடந்த நெடிய சிவலிங்கம்

திருச்சூருக்கு 45 கி. மீட்டர் தொலைவில் உள்ள கொடுங்கலூர் என்னுமிடத்தில் குரும்பமா கோவிலில் கடந்த 23-11-72 இல் 15 அடி உயரமுள்ள சிவலிங்கம் ஒன்று நிலத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டது. இக்கோவிலில் ஓர் ஆலமரத்தினடியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் ஒரு கல்தடுக்கிக் கீழே விழுந்தான். அக்கல் அங்கு எப்படித் தோன்றிற்று எனச் சிலர் அகழ்ந்து பார்த்தனர். ஒரு பெரிய சிவலிங்கத்தின் முகம் தென்பட்டது. இச் செய்தி மேலதிகாரிகட்குத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நன்கு தோண்டிப் பார்த்தபோது வேலைப்பாடுகள் அமைந்த அழகிய சலவைக்கல் அடிப்புறத்தை உடைய சிவலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பெற்றது.

## நிலவு தேய்கிறது நிலவுலகு வளர்கிறது

தற்கால அறிவியல் ஆராய்ச்சியின்படி கதிரவனைச் சுற்றிவரும் இந்நிலவுலகம் நாள்தோறும் விண்வெளியிலிருந்து ஏறக்குறைய 3000 டன்கள் எடையுள்ள துகள்களையும் சிதைவுப் பகுதிகளையும் மேலும் மேலும் பெற்று எடைகூடி வருவதாகவும், இதனுல் நிலவின் மேற் பரப்பு பெரிய அளவில் தேய்வுற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மாசேசூசெட்ஸ் என்னுமிடத்தில் கேம்பிரிட்ஜ் ஆய்வுக் கூடத்தில் உள்ள அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் இந்த உண்மையினை வெளியிட்டுள்ளனர்.

# ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்
# 27ஆம் ஆண்டு விழா

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் 27ஆம் ஆண்டு விழா, கடந்த நவம்பர்த் திங்கள் 21, 22 ஆகிய இரு நாள்களும் எஸ்பிளனேடு ஒய். எம் சி. ஏ. மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. தொழிலதிபர் திரு நா. மகாலிங்கம் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார். திரு நா. மகாலிங்கம் அவர்கள், ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம் கடந்த 27 ஆண்டுகளாக ஆற்றி வரும் நற்பணிகளைப் பாராட்டிப் பேசினர். அவர் மேலும் பேசுகையில் "இலக்கிய அறிவோடு, அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்தும் வகையில், பொருளாதார, கல்வித் துறைகளில் சீர்திருத்தம் புரிவதற்கான சிந்தனைகளை, இதைப் போன்ற மன்றங்கள் வளர்க்கப் பல விவாதங்களை நடத்த வேண்டும்" என்று கூறினர்.

பின்னர், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் தலைமையில், "செந்தமிழ் இலக்கியம் மிகவும் சிறப்புற்றிலங்குவது, அகப்பொருள் அழகாலா? புறப்பொருள் பொலிவாலா?" என்னும் ஓர் இலக்கிய உறப்புரை சுவையாக நடைபெற்றது. திருவாளர்கள் ஔவை து. நடராசன், க. ப. அறவாணன், மு. செ. சிவப்பிரகாசம். மா. எழில் முதல்வன், புலவர் தி. நா. அறிவு ஒளி, புலவர் ஆடலரசு, திரு. வலம்புரி ஜான், டாக்டர் இரா. குமரவேலன் ஆகியோர் இரு அணிகளிலும் நின்று வாதிட்டனர்.

மன்றத் துணைத் தலைவர் திரு ஊ. ஜெயராமன் அனைவரையும் வரவேற்றார். பட்டி மன்றச் செயலாளர் திரு கெ. பக்தவத்சலம் ஆண்டறிக்கையைப் படித்தார். பட்டி மன்றத் தலைவர் திரு மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். திருமதி இராஜேஸ்வரி நடராஜன் நன்றி கூறினர்.

## ம. பொ. சி. க்குப் பாராட்டு

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களின் இலக்கியப் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் விழாவாக இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

பேராசிரியர் ந, சஞ்சீவி. திரு எஸ். ஸ்ரீபால், ஐ. பி. எஸ்., கலைஞர் தி. க. சண்முகம், எம். எல். சி., திருமதி தாயம்மாள் அறவாணன் ஆகியோர் ம. பொ. சி.யின் இலக்கியப் பணிகளையும் பொது வாழ்வின் சிறப்பியல்புகளையும் பாராட்டிப் பேசினர்.

ம. பொ. சி. அவர்கள் பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், அரசியல் தலைவர்கள் வாழ்வில் அமைய வேண்டிய ஒழுக்கத்தின் இன்றியமையாமையை வற்புறுத்தினர்.

விழாவில் திரு அன்புப்பழம்நீ வரவேற்பும், திரு தே. கண்ணன் நன்றியும் கூறினர். செல்வி மொ. அ. ஜோதியின் நடன நிகழ்ச்சியுடன், பட்டிமன்றத்தின் 27ஆம் ஆண்டு விழா இனிது நிறைவெய்தியது.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.